Regd No. M. 4900

16 பக்கங்கள்.

குடி அரசு

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 12-3-1949 சனிக்கிழமை } மலர் 27.

காணேனோ?

★

புலம்பல் சித்தர்.

[1]

காவி உடையணிந்து காமக்கலை தேறி
மேவு மடச்சாமிகளும் வேதியர்கள் நூல்முறையும்
பாவிகளை உண்டுபண்ணும் 'பட்டறை' என்றென்னாட்டார்
கூவி யொழிப்பதனால் என்கண்ணேஎன் கண்ணம்மா
குறை தவிர்க்கக் காணேனோ?

[2]

கல்லுகளைச் செம்புகளைக் கடவுளர்களாக்கிவிட்டு
புல்லுருவி ஆரியரைப் பூசாரி ஆக்கிவைத்து
செல்வங்களை இதற்காய்த் தேக்கிவிட்டு மக்களெல்லாம்
அல்லற்படும் கொடுமை என்கண்ணே என்கண்ணம்மா
அழிந்தொழியக் காணேனோ?

[3]

கையிற் கமண்டலமும் கழுத்திலே தாழ்வடமும்
மெய்யில் திருநீறும் விளங்கநல்ல பஞ்சணைமேல்
தையல் சுகந்தேடிச் சாம்பசிவன் பேருரைக்கும்
பொய்யர் பொருளையெல்லாம் என்கண்ணே என்கண்ணம்மா
பொதுவாக்கக் காணேனோ?

பணமூட்டைகளுக்குப் பாதுகாப்பளிக்கும் பற்றாக்குறை பட்ஜெட்!

1949-50-ம் வருடத்திற்கு இந்திய சர்க்காரும், சென்னை மாகாண அரசாங்கமும் தயாரித்திருக்கும் வரவு செலவுத் திட்டம் துண்டுவிழும் பற்றாக்குறைப் பட்ஜட்டாகவே உள்ளன. மத்திய சர்க்கார் பட்ஜெட்டில் 14.79 கோடி ரூபாயும், சென்னை அரசாங்க பட்ஜெட்டில் 4-கோடியும் துண்டு விழுகிறது. இந்த இரு சர்க்கார்களும் பற்றாக்குறையாக உள்ளவற்றைச் சரிக்கட்டுவதற்கு புதிய பல வரிகளை விதித்தும், உள்ள வரிகளை உயர்த்தியும் உள்ளனர். இன்றைய நாட்டு நிலைக்கு இந்தப் பட்ஜெட் கொஞ்சம் கூட பொருத்தமற்றது. ஆட்சித் திறனும், மக்களின் நல் வாழ்வில் அக்கறையும் கொண்ட எந்த அரசாங்கமும் வெளியிடக்கூடாத அவ்வளவு மோசமான வரவு செலவுத் திட்டத்தை இந்த இரு அரசாங்கமும் தயாரித்துள்ளன.

மக்கள் நிலை:

இந்திய மக்களின் பொருளாதார நிலை மிகவும் தாழ்வுற்றுக் கிடக்கிறது. வாழ்க்கையின் இன்றியமையாத தேவைகளைக்கூட பூர்த்திசெய்து கொள்வதற்கு வகையின்றி மக்கள் தவிக்கின்றனர். ஏழைத் தொழிலாளிகளும், விவசாயிகளும் எண்ணற்ற இன்னல்களில் மூழ்கிக் கிடக்கின்றனர். உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமுமின்றிப் பலகோடி மக்கள் ஏங்கிக் கிடக்கின்றனர். வாழ்வு வறண்ட பாலைவனமாகிவிட்ட காரணத்தால்; அதிலே மக்களுக்கு இருந்த நம்பிக்கையும், பற்றுதலும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டு வருகின்றது. மக்களின் பெரும் பகுதியினர் சாக்காட்டை நோக்கி நடந்து கொண்டிருக்கின்றனர்.

உழைக்கும் உழைப்பாளிக்கு உழைப்பிற்கும், வாழ்க்கையின் தேவைக்கும் தக்க ஊதியம் கிடைக்கவில்லை. விளைநிலமே கதியெனக் கிடக்கும் விவசாயியோ இயற்கையின் கோரத் தாக்குதலுக்கு உள்ளாகி இரத்தக் கண்ணீர் வடிக்கிறான். நாட்டில் பட்டினியும், பஞ்சமும், வேலையில்லாக் கொடுமையும் மக்களை வாட்டிக் கொண்டிருக்கிறது. பொதுவாக இந்திய மக்களின் வாழ்விலும், குறிப்பாக திராவிட மக்களின் வாழ்விலும் அமைதியோ இன்பமோ துளிகூட இல்லை. வருங்காலத்திலாவது நாட்டில் இன்பம் நிலவும் என்ற நம்பிக்கை அளிப்பதாக இல்லை, இன்றைய இரு அரசாங்கங்களின் பட்ஜெட்களும்.

மத்திய சர்க்காரின் பட்ஜெட்:

1949-50ம் ஆண்டிற்கு மத்திய அரசாங்கம் வகுத்திருக்கும் வரவு செலவுத் திட்டம் ஒரு புதிய விளக்கம் தருகிறது. இன்றைய சர்க்கார் முதலாளித்துவத்தின் கையாட்களால் நடத்தப்படுவது என்பதை தெளிவாக விளக்குகிறது. பணக்காரர்களைக் கட்டுப்படுத்தும் வரிகளை எடுத்துவிட்டு, ஏழைகளைப்பாதிக்கும்புதிய வரிகளை விதிப்பதுதான் நேரு சர்க்காரின் பொருளாதாரக் கொள்கைபோலும்.

பட்ஜெட்டில் பற்றாக்குறை ஏற்படக்கூடாது, அதற்காகப் புதிய வரிகளையும் விதிப்பது கூடாது என்று கூறுவதற்கும் இல்லை. அரசாங்கம் சொந்த மூலதனம் போட்டுப் புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்காகத் திட்டம் வகுத்துப் பணம் ஒதுக்கப்பட்ட காரணத்தால் பட்ஜெட்டில் துண்டு விழுந்து அதைச் சரிக்கட்டுவதற்காகப் புதிய வரிகள் விதிக்கப்படுமானால், அவை வரவேற்க வேண்டியதுதான். அம்மாதிரி எந்தத் திட்டமும் இல்லாமல், பண மூட்டைகளைக் கட்டுப்படுத்தி இருக்கும் வரிகளை எடுத்து விட்டு, ஏழைகளைப் பாதிக்கும் புதிய வரிகளைப் புகுத்தி வரவு செலவை நேர் செய்யும் பொருளாதாரத் திட்டம் எந்தக் குடியரசு நாட்டின் கோட்பாட்டில் வகுக்கப்பட்டிருக்கிறதோ தெரியவில்லை! ரஷ்யக் கொடுங்கோலன் ஜாரின் பொருளாதாரத்திட்டத்திற்கும் நேரு சர்க்காரின் திட்டத்திற்கும் வித்தியாசமிருப்பதாகவே யாரும் சொல்ல முடியாது. இருக்கும் வரிகளை எடுப்பதினால் சுமார் 7 அல்லது 8 கோடி ரூபாய் குறைவு ஏற்படுகிறது. இம்மாதிரி செய்யப்பட்டிருப்பதற்கு ஏதேதோ பல காரணங்கள் கூறப்பட்டாலும், உண்மை, பணமூட்டைகளுக்குப் பாதுகாப்பளிப்பதுதான்!

வேறு வழியில்லையா?

மூலதனத்தின்மீது கிடைக்கும் லாபத்திற்கு முதலாளிகள் வரி கட்ட வேண்டும் என்பது ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் சுமார் ஒரு கோடி ரூபாய் நஷ்டமேற்பட்டிருக்கிறது. "இந்த வரி விதிக்கப்பட்டிருப்பதினால் முதலாளிகள் மூலதனம் போட்டுப் புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அச்சப்படுகின்றனர். இதனால் தொழில் வளமும், உற்பத்தியும் குறைந்து விட்டது. இந்த வரியை எடுத்து விட்டால் முதலாளிகளும் அச்சமின்றி மூலதனம் போட்டுப்புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவார்கள். உற்பத்தி பெருகி நாட்டு வளம் செழிக்கும்" என்று நிதி அமைச்சர் ஜான் மத்தாய் தன்னுடைய பட்ஜெட் சொற்பொழிவில் குறிப்பிட்டிருக்கிறார். இந்தக்கொள்கை மிகமிகப் பிற்போக்கானது எனக் கண்டிக்கிறேன். ஒரு சில பண மூட்டைகளின் மூலதனத்தையும், அதனால் நடைபெறும் தொழிற்சாலைகளையும் கொண்டு தான், உற்பத்தியைப் பெருக்கி நாட்டு வளத்தை வளர்க்க முடியும் என்று கூறி, அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வரிகளை நீக்க வேண்டியது அவசியம்தான் என்று வாதிக்கப்படுமானால் அதற்கு ஒரு அரசாங்கமும், நிதி அமைச்சரும் தேவையில்லை என்றுதான் கூறுவேன்.

முடங்கிக் கிடக்கும் மூலதனத்தை வெளியில் கொண்டு வருவதற்கு இதைவிட வேறு வழி இல்லையா? பண மூட்டைகள் பதுக்கி வைத்திருக்கும் ரொக்கப் பணத்தின்மீது 25 சதவிகிதம் ஒரு புதிய வரியை விதித்தால், அவர்கள்தான் பணத்தை முடக்கி வைப்பார்களா? அப்படி முடக்கி வைத்திருந்தாலும், குறைந்தது ஆறு ஏழு ஆண்டுகளில் அந்த ரொக்கம் அவ்வளவும் அரசாங்கத்திற்கு வரியாகவே சேர்ந்துவிடுமே. இதற்குப் பயந்து கொண்டாவது புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு முன்வருவார்களே.

அரசாங்கத்தால் வெளியிடப்பட்டிருக்கும் நாணயத்தில், பேர் பாதிக்கு மேல் சில நூறு பணமூட்டைகளிடமே தங்கிக் கிடக்கிறது. இம்மாதிரி பணம் சிலரிடமே பதுங்கிக் கிடப்பதினால் பொருளாதார நெருக்கடி ஏற்படுகிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். இம்மாதிரி பணம் குவிந்து விடுவதைத் தடுப்பதற்கு, வேறு ஒரு புதியமுறையையும் கைக்கொள்ளலாம். அதாவது, பணத்தின் மதிப்பை படிப்படியாகக் குறைத்துக் கொண்டே வந்தால் பணத்தேக்கத்தைப்போக்க முடியும். உதாரணமாக, 1940 ம் ஆண்டு வெளியிடப்பட்ட ஒரு ரூபாய் நாணயம் 1943 ம் ஆண்டின் துவக்கத்தில் பதினான்கு அணா மதிப்பையும், 1944 ம் ஆண்டின் ஆரம்பத்தில் பனிரெண்டணா மதிப்பையும் பெற வேண்

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம்.

[உரிமை ஆசிரியருக்கே]

—(புலவர் குழந்தை)—

பழந்தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களை உள்ளவாறு தெரிந்து கொள்வதற்குக் கருவியாக உள்ளவை தோல்காப்பியமும் திருக்குறளுமேயாகும். நம் முன்னையோர் ஒழுக்க முறைகளைக் கண்டறிதற்கு நமக்குக் கிடைத்த இரு கண்கள் இவை யெனல் மிகையாகாது. தொல்காப்பியம் இலக்கண நூல். திருக்குறள் இலக்கிய நூல். பழந்தமிழர் வரலாற்றுக் களஞ்சியமான இவ்விரு நூல்களின் பெருமையை இக்காலத் தமிழ் மக்கள் உள்ளவாறுணர்ந்து கொள்ளவில்லை. உணர்ந்து கொள்ள முடியாமல் அவ்விரு நூற்களின் உரையாசிரியர்கள் மருட்டி விட்டனர்; இவை தமிழர் ஒழுக்கம் கூறும் தனித் தமிழ் நூல்கள் என்பதை அறியாமல் செய்து விட்டனர்; தொல்காப்பியமும் திருக்குறளும் கூறும் ஒழுக்க முறைகள் தமிழர் ஒழுக்க முறைகள் அல்ல, அவை ஆரிய ஒழுக்க முறைகள் என எண்ணும்படி மயக்கி விட்டனர்; ஆரியக் கொள்கைகளைப் புகுத்தி, ஆசிரியர் கருத்தை அறிய முடியாமல் செய்து விட்டனர். இதனாலேயே அவ்விரு நூலும் தமிழ் மக்களால் பயிலப் படாமல், தமிழ் மக்களிடையே பரவாமல், என்? பெரும்பாலான தமிழ் மக்களுக்கு அவற்றின் பெயரே தெரியாமல் மாசு படிந்த மணி போல் மறைந்து கிடக்கலாயின. பாரதம், இராமாயணம், கீதை தெரிந்த அளவுக்கு, தமிழ் மக்களுக்கு இவை தெரியாமல் போயின. பாரத ராமாயண கீதை பரப்பப்பட்ட அளவில் இவை பரப்பப்படவில்லை. என்? ஏனென்று கேட்க முடியாத நிலையில் இது நாள் வரை தமிழ் மக்கள் ஏமாந்து கிடந்தனர். ஏமாறவில்லை, ஏமாற்றப்பட்டனர். தாய்மொழியை மறந்து அயல் மொழிக்கு அடிமைப் பட்டிருந்தனர். இல்லை, அடிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

எடுத்துக் காட்டாகப் பள்ளிக் கூடங்களை எடுத்துக் கொள்வோம். கல்விக் கழகங்கள் வடமொழிக் கதைகளுக்கும், வடமொழி நூல்களுக்கும் புகலிடங்கள் ஆயினவே யன்றி, தொல்காப்பியமும், திருக்குறளும் புக இடந்தரவில்லை. தமிழர் பண்பாட்டுக்கு மாறுபட்ட நன்னூலுக்குக் கிடைத்த செல்வாக்குத் தொல்காப்பியத்திற்குக் கிடைக்கவில்லை. தொல்காப்பியமென ஒரு பழந்தமிழ் இலக்கண நூல் இருக்கிற தென்றே, தமிழாசிரியர்கள் தமிழ் மாணவர்களுக்கு எடுத்துரைக்க வில்லை. உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் ஒரு மாணவனுக்கு தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ்ச் சொல்லே தெரியாது. தம் முன்னோர் ஒழுக்கங் கூறும் ஒரு நூலை ஒரு தமிழ்ப் பாடம் படிக்கும் மாணவன் தெரியாத நிலையில் இருந்து வந்தது கல்விக் கழகம். இது இன்றல்ல, பகுத்தறிவு இயக்கம் தோன்றாத அன்று. தமிழ் சிவபெருமானால், முருகக் கடவுளால் அகத்தியர்க்குக் கொடுக்கப் பட்டது; அகத்தியர் தமிழர்க்குக் கொடுத்தார் எனப் பெருமை பேசி வந்த புலவர்கள் தமிழாசிரியர்களாய் இருந்த போது. அகத்தியர் மாணாக்கர் பன்னிருவரில் ஒருவராகிய தொல்காப்பியர் செய்தது தொல்காப்பியம் எனப் பழம் பெருமை பேசி வந்தவர் தமிழுக்கு அதிகாரிகளாய் இருந்த போது, தொல்காப்பியத்தின் பெயரை ஒரு தமிழ் மாணவன் அறியாதவனாய் இருந்தான். அவனுக்கு அறிவிக்கப் படவில்லை. தொல்காப்பியம் பேரிலக்கணம், நன்னூல் சிற்றிலக்கணம் என்று கூடச் சொல்லவில்லை. "குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி—உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே" [குற்றெழுத்துக்குப் பின்னும், வல்லின உயிர் மெய்க்கு முன்னும் மூன்று புள்ளி வடிவாய் வரும் ஆய்தவெழுத்து—அஃது] என்னும் சூத்திரத்தைச் சொல்லித் தரும் போது, இது தொல்காப்பியச் சூத்திரம், மேற்கோளாக நன்னூலார் தம் நூலில் எடுத்தாண்டுள்ளார், என்று கூடத் தொல்காப்பியத்தின் பெயர் சொல்லமாட்டார்கள். அவ்வளவு தமிழ்ப் பற்று!

இனி மாணாக்கர்க்குப் பாடம் சொல்லும் போது ஏதேனும் ஓர் ஒழுக்க முறையை விளக்க வேண்டுமானால், இராமாயணத்திலிருந்தும், பாரதத்திலிருந்தும், கீதையிலிருந்தும் அல்லது ஏதாவதொரு புராணத்திலிருந்தும் மேற்கோள் காட்டி விளக்குவார்களே யல்லாமல், தமிழ் ஒழுக்க நூலாகிய திருக்குறளிலிருந்து ஒரு குறளை எடுத்துக் காட்டி விளக்கமாட்டார்கள். திருக்குறள் அவர்களுக்கு அவ்வளவு கசப்பு! வடநூற் கருத்துக்களை எடுத்துக் காட்டுவதைப் பெருமை யெனக் கொண்டதும், வடநூற் கருத்துக்களைப் புகுத்தித் தமிழ் மாணவர்க்குத் தமிழுணர்ச்சியும், தமிழினப் பற்றும் ஏற்படாமல் செய்ய வேண்டும் என்னும் கெட்ட எண்ணமுமே இதற்குக் காரணமாகும். புராணமும், இதிகாசமும், சமயப் பாடல்களுமே நிரம்பியுள்ள உயர்நிலை வகுப்புப் பாட நூல்களில், ஏதோ பேருக்குப் பத்தெட்டுக் குறள் இடம் பெற்றாலும், அவற்றைப் பொருள் விளங்கச் சொல்லித் தருவதில்லை. ஒருவாறு சொல்லினும் ஆசிரியர் கருத்துக்கு மாறாக வடநூற் கொள்கையைப் புகுத்தி மாணாக்கர் மனத்தை மருட்டி விடுவர். எடுத்துக் காட்டாக, "அறத்தா றிதுவென வேண்டா; சிவிகை

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை

மூன்றாம் பருவம்

கண்ணில்லாக் கபோதி!

போட்டி

எண் 13.

"காளிதான் செய்திருக்கவேண்டும்."

"இருக்காது அந்த அம்மாள் கொடுத்த சாபம்தானப்பா, வீடு போகும்முன் கண்கள் காணாமற் போய்விட்டது."

எப்படியோ கண்கள் மண்ணாகிவிட்டன. காளி கோயிலிலேயே காத்துக்கிடந்த அந்தப் பயல், ஒரு வருஷமாகக் கருப்புச் சட்டையை மாட்டிக்கொண்டு, காளியையே கேவலமாகப் பேசினால் காளிக்குக் கோபம் வராதா என்ன? சமயம் பார்த்துப் பழிவாங்கிவிட்டாள்"—வீதியிலே நண்பரிருவர் உரையாடல்.

* *

"பார்த்தீராய்யா பிள்ளைவாள்! அவன் யோக்யதையை.......நான்தான் சொல்லிண்டேயிருந்தேனே ...அந்தச் சட்டையை மாட்டிண்டாலே போக்கிரிக் குணம் வந்துடுமே, இதிலேயிருந்தாவது தெரிகிறதா அந்தக் கருப்புக் கூட்டமே மோசமானது என்று...காமலோப மோகங்களிலீடுபட்டோரைப் பகவான் தண்டிக்காமல்விடமாட்டார் என்று நாங்கள் உபந்யாசித்தது பொய் என்றும், கலி காலத்திலே கடவுளால் என்ன செய்யமுடியும் என்றும் கூறினீர்களே, பார்த்தீரா அந்தப்பயல் சுந்தரத்தின் கதியை ...கைமேல் பலன் கிடைத்துவிட்டது. கற்புக்கரசியான அந்தப் புஷ்பவதியம்மாளைத் தீண்ட நினைத்தான், கடவுள் பார்த்தார், கண்ணைப் பிடுங்கிவிட்டார்..."

"தொலைந்தான் படுபாவி...எந்தக்காலத்திலும் தெய்வ சக்தி அழிந்தா போய்விடும்"—வைத்தினாதய்யருக்கும் வரதராஜ பிள்ளைக்கும் நடந்த உரையாடல்.

* *

எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? சுந்தரம் நல்லவனாகத்தான் இருந்தான், அவனால் அவன் கட்சிக்கே அந்த வட்டாரத்தில் நல்ல மதிப்பு. ஆனால் அவன் இவ்வளவு அயோக்யத்தனமாகப் போவான் என்று யார் கண்டார்கள். இப்பொழுதுதானே தெரிகிறது அவன் ஒரு ஆஷாடபூதி என்று...பதிலுக்குப் பத்திரகாளி சரியான கூலிதான் கொடுத்திருக்கிறாள்—சந்து பொந்துகளிலிருந்து வெளிவரும் பேச்சு.

* *

"சுந்தரம் இப்படியெல்லாம் ஊரில் உன்னைப்பற்றிப் பேசும்படி ஏன் ஆக்கிக்கொண்டாய்?... உன்னுடைய பகுத்தறிவு எங்கே போய்விட்டது? உண்மை என்ன? ஊரில் நடக்கும் பேச்செல்லாம் உண்மைதானா? இல்லாவிட்டால் நடந்ததைச் சொல்..ஊம்...சொல் நண்பா...பளபளப்பான உன் மேனி பஞ்சடைந்துவிட்டதைக் காண என் நெஞ்சு துடிக்கிறது நண்பா......நடந்ததை என்னிடம் கூடச் சொல்லமாட்டாயா..."

"சந்திரசேகர் ஏன் அழுகிறாய்? அழவேண்டியவர்கள் நானும் என் மனைவியும். நீ அழாதே! நண்பா! இயற்கை எனக்களித்த, இன்ப உறுப்புக்களாகிய என்னுடைய கண்கள்—சந்திர சூரியர் என்று என் மனைவியால் வர்ணிக்கப்பட்ட என்னிருகண்கள்—வானவில்லிலுள்ள வர்ண ஜாலங்களையும், சாலைகளையும், சோலைகளையும், இன்ன பிற இயற்கை வனப்புகளையும் என் உள்ளத்திற்குக் காட்டிய என்னிருகண்கள்—இன்று தன் ஒளியை இழந்தன... நான் கபோதியானேன்...இதற்காக நான் வருந்தவில்லை...இன்னும் ஓரிரு மாதங்களில் என் மனைவி ஈன்றெடுக்கும் என் குழந்தையைக் காணாமற்போய் விட்டதே என்பதற்காகக்கூட நான் வருந்தவில்லை. ஆனால் இந்த ஊரில் நான் ஒரு காமுகனாகக் கருதப்பட்டு, காளியால் கண்பிடுங்கப்பட்டேன் என்று பொய் பிரசாரம் செய்யப்படுவதுதான் என்னை சித்திரவதை செய்வது போல் இருக்கிறது. இந்த இழி சொற்கள் என் பொறுப்பு வாய்ந்த இயக்கத்தையே பாதிக்கும்படி மற்றக்கட்சித் தோழர்கள் செய்துவிட்டதுதான் என்னை வாட்டுகிறது. பால்காவடி தூக்கிப் பழனி சென்று முருகதரிசனம் செய்து திரும்பவந்து படுக்கையிலேயே பத்துமாதம் இருந்தபோது, பகவான் சுந்தரத்தை சோதிக்கிறார் என்று சொன்ன வாய்கள்தான் இன்று கண்ணைப்பிடுங்கிவிட்டாள் காளி என்கிறது...

நண்பா! அந்த புஷ்பம் "கற்புக்கரசி, கண்ணகியின் மறுபிறப்பு, அவள் பெய்யென்றால் மழை பெய்யும்" என்றெல்லாம் கூறுகின்றார்களே, அந்தப் புஷ்பம்—கணவனுக்குப் பின் தூங்கி, முன்னெழும் பெண், கணவனை வலம் வந்து வணங்கித்தான் தன்வேலையைத் தொடங்குவாள். தன் கட்டைவிரலைப் பார்த்துத்தான் நடப்பாள்....அவளைத்தான் நான் கெடுக்க நினைத்தேனாம்...உண்மையை உணரமுடியாத உலகம் தானே இது...நண்பா! அவள் அழகிதான்...அவளைக் காதலித்ததும் உண்மைதான்...எப்பொழுதென்று நினைக்கிறாய்...அவளுடைய திருமணத்திற்கு முன்பு நாங்களிருவரும் அன்புக் காதலர்கள். எத்தனையோ முறை வாதாடினேன், புஷ்பம்! நீ மாமேறிக்குலமானாலும் நான் பொன்வேலைக்காரனாக இருந்தாலும் ஒன்றுதான். நீ சம்மதம் தெரிவித்தால் நாளையே நாம் சதிபதியாவோம்... உனக்கு இங்கிருக்க விருப்பமில்லை என்றால்—உனக்காக—கலப்புமணம் தேவை என்பதை நிரூபிக்கவும் வேண்டி என் பிறந்த ஊரைப் பிரிந்து உன்னுடன் வருகிறேன் என்றெல்லாம்கூட கெஞ்சிக் கேட்டேன்.

கன்னிப் பெண்களைக் காப்பாற்றுவதாகக்கூறி, கற்பழித்துவிட்டு கைவிட்டுவிடும் கயவர்களின் கதையைப் படித்தாளோ, அன்றி தாய் தந்தையர் உற்றார் உறவினர்கள் ஏசுதலுக்கு இடமாகுமே என்று பயந்தாளோ... நான் ஊரில்

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

திரைப்பட விமர்சனம்

நல்ல தம்பி!

★

நாட்டின் உயிர்நாடி கிராமங்கள். ஆனால் நம் நாட்டுக் கிராமங்கள் மிகவும் கீழ் நிலையிலுள்ளன. உணவு, உடைப்பஞ்சத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்டவர்கள் கிராமவாசிகளே. நெல் விளையும் பிரதேசத்தில் அவர்களுக்குக் கூழும் கிடைப்பதில்லை. நெசவு செய்வோர் வீட்டில் அணிவதற்கு நாலுமுழத் துணியும் இருப்பதில்லை. காரணம், செல்வமெல்லாம் எவரோ ஒருசிலரிடத்தில் ஜமீனாகவும், மிட்டா மிராசாகவும் முடங்கிக் கிடப்பதே. இதற்குப் பரிகாரமாக ஒரு வேலை தான் "ஜமீன் ஒழிப்பு". ஜமீன்தாரே நல்ல மனத்துடன் விட்டுக்கொடுத்து விட்டால் சர்க்காருக்கும் சிரமமில்லை; மக்களுக்கும் நல்லது. இதைத் தெளிவான முறையில் அழகுபடச் சித்திரித்துக் காட்டுவதுதான் "நல்லதம்பி"

திரைக்கதை:

மரணத் தருவாயிலுள்ள சொப்பனபுரி ஜமீன்தார் தனது ஜமீனில் பகுதியைத் தன் ஒரே மகள் புஷ்பாவுக்கும், மற்ற பகுதியை எங்கோ கிராமத்தில் வசிக்கும் தன் சகோதரியின் மகன் நல்லதம்பிக்கும் உயில் எழுதி வைக்கிறார். ஜமீன்தார் இறந்ததும் ஜமீன் வக்கீல் நல்லதம்பியைத் தேடி கிராமம் கிராமமாக அலைந்து கடைசியில் ஒரு கிராமத்தில் கண்டுபிடிக்கிறார். அங்கே நல்லதம்பி கிராமங்களைச் சீர்திருத்தும் வேலையில் தீவிரமாக முனைந்திருக்கிறார். கிராமவாசிகளுக்குப் பலவகையிலும் உதவி புரிந்து வாழ்கிறார். தனக்கு ஜமீன் கிடைத்த செய்தி நல்லதம்பிக்கு வியப்பையளிக்கிறது. சரியென்று சொப்பனபுரிக்குப் புறப்படுகிறார். ரயிலில் வந்துகொண்டிருக்கும் போதே வழியில் தன் சிநேகிதியும், பனையப்பட்டி மிட்டாதார் மகளும், 'நர்ஸ்' உத்தியோகத்தோடு கிராம சேவையில் ஈடுபட்டவளுமான ராணி காரில் செல்லக் கண்டு, கீழே குதித்துவிடுகிறார். ராணியின் தகப்பனார் "எச்சில் கையால் காக்காய் ஓட்டாத" தர்மப் பிரபு என்பது தெரிந்து, தன்னை ஓரிரவு அவர்கள் வீட்டில் தங்கவைத்தால் உண்மையிலேயே அவரைத் தர்மப் பிரபு ஆக்குவதாகக் கூறி ராணியுடன் திட்டம் போடுகிறார். அதன்படி செஞ்சிக் கோட்டையில் தேசிங்குராஜன் புதையல் இருப்பதாக நடித்து பரதேசிகளுக்கு அன்னமிடும்படி ஏற்பாடு செய்கிறார். மிட்டாதாரும் பேராசையால் அவ்விதமே செய்து வருகிறார். அய்ம்பது மூட்டை அரிசியும் மறைகிறது. இடையே தன் தோழிகளுடன் பேசிக்கொண்டிருந்த ராணி இதன் ரகசியத்தை வெளியிடவே மிட்டாதார் இதைக் கேட்டுவிட்டு ராணியைத் திட்டியதுடன் நல்லதம்பியையும் துரத்துகிறார். அங்கிருந்து தப்பிய நல்லதம்பி ஜமீன் அரண்மனை அடைகிறார். அங்கே சென்றபின் ஜமீன் பதவியை ஏற்று, வீண் ஆடம்பரங்களை அறவே வெறுத்து ஒதுக்குகிறார். நல்லதம்பியைப்பற்றி மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்த புஷ்பா ஏமாறுகிறாள். இவரது எளிய வாழ்க்கைமுறை ஜமீன் மானேஜர் பூபதிக்கும் எரிச்சலைத் தருகிறது. பூபதியும் புஷ்பாவும் கலந்து பேசுகின்றனர். அதன் விளைவாக நல்லதம்பியைத் தன் அழகால் வசீகரித்து அவர் அந்தஸ்துக்கேற்றபடி ஆடம்பரமாக நடக்கவேண்டுமெனக் கூறி, புஷ்பா செய்யும் முயற்சி பயனளிக்கவில்லை. நல்லதம்பி அவளது போக்கைக் கடிந்து வெறுக்கிறார்.

நல்லதம்பி, ஜமீன்தார் ஆனதைக் கேள்வியுற்ற 'நர்ஸ்' ராணி அவரைக் காணவருகிறாள். அவளது உதவி தன் கிராம சீர்திருத்த வேலைகளுக்கு மிகவும் தேவை என்பதை யுணர்ந்த அவர், ராணியை 'டைப்பிஸ்ட்'டாகத் தன்னுடன் வைத்துக்கொள்ளுகிறார். இருவருமாகப் பல கிராமங்களுக்கும் சென்று, உழவர்களின் ஏழ்மை நிலையை அறிந்து, அரண்மனையில் ஏராளமாகக் கிடக்கும் துணிகளை எடுத்துக் கிராமவாசிகளுக்கு வழங்கிவிடுகின்றனர்.

இதையறிந்த புஷ்பா திகைக்கிறாள். பூபதி ஜமீனை நல்லதம்பியிடமிருந்து பறிக்கத் திட்டம் போடுகிறான். அவன் பம்பாய் சென்று திரும்புவதற்குள் நல்லதம்பி தன் பங்குக்குரிய கிராம நிலங்களைக் கிராம மக்களுக்கே சொந்தமெனச் சாசனம்செய்து, அங்கே கூட்டுப்பண்ணை முறையையும் ஏற்பாடு செய்துவிடுகிறார். உரிமையிருக்குமிடத்தில்தானே கடமையுணர்வும் பொறுப்புணர்ச்சியும் இருக்கமுடியும்! அவ்வாண்டு விளைச்சல் ஒன்றுக்கு மூன்றாகிறது. கிராம மக்களெல்லாம் ஒருமுகமாக நல்லதம்பியை வாழ்த்துகின்றனர்.

பூபதி திரும்பியதும் இச்செய்தியைக் கேள்வியுற்று, நல்லதம்பிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்றும், அவர் நிர்வாகத்தில் ஜமீன் இருக்கக்கூடாதென்றும் அரசாங்கக் கமிட்டி ஒன்றின்முன் வாதாடுகிறார். ஆனால் ராணியின் உதவியாலும் கிராமவாசிகளின் ஆதரவாலும், நல்லதம்பிக்குப் பைத்தியமில்லையென்றும், ஜமீன்தாரின் உயில்பிரகாரம் அவர் புஷ்பாவை மணக்கவேண்டுமென்பது நிர்ப்பந்தமில்லையென்றும் தீர்ப்புக் கூறப்படுகிறது.

நல்லதம்பியும் ராணியும் திருமணம் புரிந்துகொண்டு மீண்டும் கிராமத் தொண்டு செய்துவருகின்றனர்.

கதையமைப்பு தளபதி அண்ணாத்துரையினுடையதாகும். அவரது அடுக்குமொழிவசனங்கள் கதை பூராவும் இல்லையென்றாலும், சுமார் ஏழெட்டு இடங்களில் சிறப்பாக அமைந்துள்ளன. மற்ற இடங்களில் சாதாரணமுறையில் எவருக்கும் விளங்கும்வண்ணம் வசனம் சிறிய சொற்றொடர்களுடன் விளங்குகிறது.

உடுமலை நாராயணக் கவிஞரின் பாடல்கள் இப் படத்தில் தனிச் சிறப்புடன் இலங்குகின்றன. மதுவிலக்குப் பிரசாரப் பாடல்கள் குறிப்பிடத்தக்கன. ஆங்கில மெட்டுகளில் "கிளியோபாட்ரா" பாட்டுகள் அருமையாக அமைந்துள்ளன. கிந்தனார் காலட்சேபத்தில் நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளை யொட்டி பாடப்படும் பாட்டுகளும் நன்றாயிருக்கின்றன.

நடிப்பு:

நகைச்சுவை அரசு தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் ஒரு தலைசிறந்த நகைச்சுவை நடிகர் மட்டுமல்ல, பிரதம பாகம் தாங்கிப் பலவித உணர்ச்சிகளும் தோன்றத் திறம்பட நடிக்கக்கூடிய ஒரு குணசித்திர நடிகருங்கூட என்பது இப்படத்தின் வாயிலாக வெளியாகிறது. ஜமீன் ஆடம்பரங்களை வெறுக்கும்போதும், ஜமீன்தாரிணி யென்றால் "படிப்பு இருக்கவேண்டும், ஆனால் படாடோபங்கூடாது; அடக்கம் இருக்கவேண்டும், ஆனால் அசடாயிருக்கக் கூடாது; அழகு இருக்கவேண்டும் ஆனால் ஆள்மயக்கியாக இருக்கக் கூடாது" என்று கூறுமிடத்திலும், "இருமனம் ஒன்றானால் திருமணம் ஆனமாதிரிதானே" என்று காதலின் உயர்வை சுருங்கச் சொல்லி விளக்குமிடத்திலும், கமிட்டியார் முன்னிலையில் "மக்கள் கட்டளை, அதுவே மகேசன் கட்டளை" என்று, தான் பைத்தியமல்லவென்பதையும், கிந்தனார் காலட்சேபம் நாஸ்திகப்பிரசாரம் அல்ல, கல்வியின் பெருமை சொல்வதாகும் என்பதையும் விளக்கும்போதும், தான் வணங்கும் கடவுள்

கள் என்று தன் பெற்றோரையும் சரித்திரப் புகழ்பெற்ற மக்களின் தொண்டர்களான புத்தர், எசுநாதர், காந்தியார் ஆகியோரின் படங்களைக் காட்டும் போதும் அவரது நடிப்பு உள்ளங்கவர்வதாக உள்ளது. மற்ற இடங்களிலெல்லாம் எப்போதும் போல், தெவிட்டாத நகைச்சுவையை அள்ளி வீசிக்கொண்டே இருக்கிறார்.

பூபதியாக நடிக்கும் தோழர் சகஸ்ரநாமம் தனது பாகம் குறைந்ததானாலும் மிகத் திறம்பட நடித்திருக்கிறார்.

வண்டாக நடிக்கும் தோழர் சி. எஸ். பாண்டியன், உதவி மானேஜராக நடிக்கும் தோழர் டீ. வி. நாராயணசாமி, வேலைக்காரன், பரதேசி முதலிய எழெட்டுச் சில்லரை வேடங்களில் நடிக்கும் தோழர் டி. வி. ராதாகிருஷ்ணன், தேவேந்திரனாக நடிக்கும் தோழர் கே. பி. காமாட்சி, புளிமூட்டை ராமசாமி, மிட்டாதாரராக நடிக்கும் ஆழ்வார் குப்புசாமி முதலியவர்கள் யாவரும் சிறப்புடன் நடித்திருக்கிறார்கள்.

குறிப்பிடத்தக்க முறையில் புஷ்பாவாக நடிக்கும் தோழியர் பானுமதி இப்படத்தில் தெளிவாகத் தமிழ் பேசுகிறார். நடிப்பும் விசேஷமாக இருக்கிறது. அழகுக்கு அழகு செய்வது போல் ''நல்லதம்பி'' கதைக்கிடையே ''கிளியோ பாட்ராவும், அந்தோனியும்'' என்ற ஷேக்ஸ்பியரின் கதையைப் பொருத்தி, அதில் பானுமதி நடித்திருப்பதும் தனி எழிலுடன் விளங்குகிறது.

'நர்ஸ்'ராணியாக நடிக்கும் தோழியர் மதுரம் நன்கு நடித்திருக்கிறார். கிராமவாசிகளின் நிலையை அறிந்து வரும் போதும், கிராம மக்களுக்கு நிலத்தைச் சொந்த மாக்கும் திட்டத்தை வெளியிடும் போதும், ''நல்லதம்பி எப்படி தன் சொத்துக்களைக் கிராமவாசிகளுக்குச் சொந்தமாக்க மனம் வந்தது என்று எல்லோரும் ஆச்சரியப்படுகிறார்கள், ஆனால் எல்லோருக்கும் ஏன் தன்னைப் போல் மனம் வரவில்லையென அவர் ஆச்சரியப்படுகிறார்'' என்று கூறும் போதும், கமிட்டியார் முன்னிலையில் நல்லதம்பிக்காக வாதாடும் போதும் அவரது நடிப்பு உயர்தரம்.

சிறப்புகள் சில:

படத்தின் நீளம் 17,925 அடி. இதில் ஆரம்பம் முதல் இறுதி வரை ஒரேவிதமான ''டெம்போ'' அமைந்திருப்பதுதான் சிறப்பாகும். எந்த இடத்திலுமே அலுப்புத்தட்டுவதில்லை. இவ்வளவு நீளமான படம் மிக விரைவில் ஓடி முடிந்து விடுவது போல் தோன்றுகிறது.

''இந்திரதர்பார்'' தெருக்கூத்தில் மதுவிலக்கின் உயர்வு, தமிழ் நாட்டின் பெருமை, அந்தக்காலத்தைவிட இந்தக்காலமே சிறந்தது என்ற உயரிய கருத்து—இவை நல்ல முறையில் விளக்கப்படுகின்றன. அழகால் அந்தோனியை மயக்கிய கிளியோ பாட்ரா ராணியின் கதையை நல்ல தம்பியை மயக்க எண்ணிய புஷ்பாவுடன் பொருத்திக்காட்டியிருப்பதும் சிறப்பாகும்.

பணக்காரரின் பேராசையும், அதை மட்டந்தட்ட அவருக்குப் புதையல் என்று ஆசைகாட்டித் தருமம் செய்யும்படி ஏற்படுத்தித் திருத்துவதும், ஜமீன்தார்களின் வீண் ஆடம்பரங்களைப் பல முறையிலும் கண்டிப்பதும், 'முடி திருத்தும் தொழில் கேவலமான தல்ல அழகுக் கலை' என்று அதை மிகமிக உயர்த்திக் காட்டுவதும், கிராமவாசிகளின் இன்னல்களை அப்படியே படம்பிடித்துக் காட்டுவதும், நிலம் மக்களுக்குச் சொந்தமாகி அவரவர் சக்திக்கேற்ப உழைப்பது, தேவைக்கேற்ப எடுத்துக் கொள்வது என்ற முறை வந்தபின் மக்கள் வாழ்க்கையில் மலர்ச்சி ஏற்படுவதும், கல்வியை நம்பினோர் கைவிடப்படார், படிப்புதான் தீண்டாமையை ஒழிக்கும், எந்தத் தலைவரும் செய்ய முடியாத தீண்டாமை ஒழிப்பை இந்த நாட்டுக்கு வந்த அன்றே செய்துவிட்ட ரயிலின் பெருமை ஆகியவற்றை விளக்கும் கிந்தனார் கதையும், தான் நாஸ்தீகன் அல்லவென்று கூறும் நல்லதம்பி தான் வணங்கும் கடவுள்களாக தன்னைப் பெற்ற தாய் தந்தையர், மக்களுக்காகப் பாடுபட்டுச் சரித்திரப் புகழுடன் விளங்கும் புத்தர் பெருமான், ஏசுநாதர், காந்தியடிகள் ஆகியோரைக் காட்டுவதும், இறுதியில் நம் நாட்டிற்கு மிகவும் தேவையானது சிரிப்புதான் என்று, சிரிப்பின் சிறப்பை விளக்கிக் காட்டுவதும் படத்தின் உயர்வான கட்டங்களாகும்.

எனினும் இரண்டொரு குறைபாடுகளும் படத்தில் உள்ளன. ஓடும் ரயிலில் இருந்து நல்லதம்பி குதிப்பது ஏதோ ''ஸ்டண்ட்'' படத்வைத நினை ஊட்டுகிறது. நல்லதம்பி ஜமீன் பதவியேற்றதும் தைரியமாகச் சில சீர்திருத்தங்களைச் செய்கிறார். புஷ்பாவுக்கு ஜமீன்தாரிணி எப்படியிருக்க வேண்டுமென உபதேசம் புரிகிறார். பிறகு ஓரிடத்தில் தன்காதல் செய்தியையும் மறைக்காது வெளியிடுகிறார். இவ்வளவு துணிவுள்ள அவர், தன்னைப் பார்க்க வந்த ராணியை புஷ்பாவுக்குப் பயந்து கொண்டு கூவரம் செய்து கொள்ளும் நாற்காலியில் மறைத்து வைப்பதும், அவளுடன் தன் தோழனான வண்டு என்பவனையும் சேர்த்து மூடிவைப்பதும் மிகவும் பொருத்தமற்றதாகும். நகைச் சுவைக்காக என்று வைத்துக் கொண்டாலும் சற்று மிகைப்படவே காணப்படுகிறது.

சுருங்கக் கூறுமிடத்து, 'நல்லதம்பி' எத்தனை முறை பார்த்தாலும் தெவிட்டாத படம். நாட்டுக்குத் தேவையான படம் என்பது மட்டுமின்றி, தக்க தருணத்தில் வந்ததாகும். அதாவது மதுவிலக்கு சர்க்காரால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டாலும், மக்களில் பலர் திருட்டுத்தனமாய்க் குடிக்க முயற்சிக்கின்றனர்; அவர்கள் ''நல்லதம்பி'' படத்தைப் பார்த்தால் நிச்சயம் குடியை மறந்துவிடுவார்கள் என்றே நம்பலாம். ஜமீன் ஒழிப்பு மசோதா சட்டசபையில் நிறைவேறிற்றே ஒழிய, மத்திய ஏகாதிபத்திய சர்க்கார் தலையீட்டால் அமுலுக்கு வராமலிருக்கிறது. இந்த நிலையில் ஜமீன்தார்கள் ''நல்லதம்பி'' படத்தைப் பார்த்தால் தாங்களாகவே விட்டுக் கொடுத்துவிடுவார்கள் என்று நம்பக்கூட இடமிருக்கிறது. ஆகவே படத்தின் இறுதியில் கூறப்படுவது போல் எல்லோரும் 'நாட்டுக்கேற்ற நல்லதம்பி'களாய் மாறுங்காலம் விரைவில் வருமாக.

இம்முறையில் நாட்டுக்குத் தேவையான இரண்டாவது படத்தையும் தாங்களே தயாரித்த 'எனெஸ்கே பிலிம்ஸார்' நமது மனமார்ந்த பாராட்டுதலைப் பெறுகிறார்கள். இவர்கள் மேலும் இம்மாதிரி சீர்திருத்தப் படங்களையே வெளிக்குக் கொணர்ந்து இந்தச் சீர்குலைந்த தமிழகத்தை உயர்வுபடுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

பொது மக்களும் போட்டி போட்டுக் கொண்டு எத்தனை முறை வேண்டுமானாலும் ''நல்லதம்பியை''ப் பார்க்கலாம்.

—எஸ். கருணானந்தம்.

தமிழிலக்கிய மறு மலர்ச்சிச் சொற்பொழிவுகள்.

★

தொல்காப்பியம், திருக்குறள், சங்க இலக்கியங்களைப் பொது மக்களிடையே பரப்பவும், இலக்கியங்களைக் கற்பதில் ஆர்வம் உண்டு பண்ணவும், தமிழ் நாடெங்கணும் சுற்றி ஏப்ரல் 15-ம் நாள் முதல் மே பதினைந்தாம் நாள் முடிய, ஒரு மாத காலம் கோடை விடுமுறையில் சொற்பொழிவுகள் ஆற்ற எண்ணியுள்ளோம். ஆங்காங்குள்ள அன்பர்களும் கழகங்களும் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வார்களாக. கூட்டங்கள் கூட்டுவதற்கு விருப்பமுடையவர்

இங்கர்சால் சொற்பொழிவு.

ஒரு நன்றி கூறும் நடப்பு!

தமிழாக்கம்:— நெடுஞ்சேரலாதன்.

பல ஆண்டுகட்கு முன், நம் முன்னோர்கள் புதர்களிலும், குகைகளிலும் வசித்தனர். அவர்கள் உடலும், தாழ்ந்த முன் தலைகளும் மயிரினால் மூடிக்கிடந்தன. அவர்கள் உண்டவையெல்லாம், தழைகளும், கிழங்குகளும், வேரும், பட்டைகளுமாகும். அவர்கள் பாம்புகளையும், பச்சை மீன் இனங்களையும் பெரிதும் விரும்பினார்கள். அவர்கள் நெருப்பைக் கண்டு பிடித்தார்கள். ஒரு வேள்ளை அசந்தர்ப்பமாக, உரைப்பினால் தீ உற்பத்தி செய்யலாம் எனக் கண்டு பிடித்து . இருத்தல் கூடும். அவர்கள் தம்முடலங்களை குளிரினின்றும், பனியினின்றும் எங்ஙனம் எதிர்த்தக் கனல் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று கண்டு பிடித்துக் கொண்டார்கள். அவர்கள் புதுமையான கொம்புகளையும், உறுதியான கல்லாயுதங்களையும் கண்டு பிடித்து, பெரும் மிருகங்களைக் கொல்லவும், பின் தம்மைத் தாமே தாக்கிக் கொள்ளவும் முற்பட்டார்கள். மெதுவாக இன்னலுடன் - முன்னேற்றத்தின் தோற்றமே தோன்ற முடியாத முறையிலே—மிகமிக மெதுவாக அவர்கள் முன்னேறினர். அவர்கட்கு உலகம் என்பது என்ன என்று தெரியாது. எனினும் அதிசயமும், புரியாதவையும், வருத்தமுமே நிறைந்திருந்தது. காடுகள் பயங்கரங்களால் நிறைந்தும்; இருள், பேய், பிசாசு, பயங்கரக் கடவுள்களாலும் முடிசூடப்பட்டிருந்தது.

இந்த ஏழை உயிரினங்கள், பயத்தின் அடிமைகளாகவும், கனவின் பிரதிகளாகவும் வாழ்ந்தன.

சில சமயம் ஒருவன் மற்றவர்களை காட்டிலும் சிறிது முன்னேறி, மூளையிலே சிறிது சிந்தனையை நுழைக்கவும், புதிதான சிறிய நல்ல வழிகளைக் கண்டு பிடித்தான். பின் அவனை மக்கள் கொன்றனர். பின்பு அவர்களே அவர்கள் செய்கைக்கு வருந்தி, அவன் புதைகுழி முன் முழந்தாளிட்டு மன்றாடினர். பிறகு வேறு ஒருவன் தன் கருத்தைக் கூற, அவனும் கொலை செய்யப்பட்டு, அவன் புதை குழியும் புனிதமாகி, மற்றொரு அடி முன்னேறியது. இங்ஙனம் எண்ணிலா ஆண்டுகள் மடமையிலும், சித்திரவதையிலும், சிந்தனையிலும், தவறுகளிலும், கொலைகளிலும், பிரார்த்தனைகளிலும், விரதத்திலும், வேதனையிலும் தன்னம்பிக்கை மறுத்தலிலுமாகக் காலங்கழிந்து இன்றைய உன்னத நிலையிலே நாம் நிற்கிறோம்.

பிற்பகுதியை நோக்கும்போது, நீண்ட பயங்கரப் பாதை; காட்டுமிராண்டிக் காலத்திற்கும், இன்றைய நாகரீகக் காலத்திற்கும் இடையே விரிந்து கிடப்பதைக் காண்கிறோம். அலைகளைப் போன்ற நூற்றாண்டுகள் நீண்ட காலக் கரையைத் தொட்டுச் சென்றதை எண்ணும் தோறும், நம் மூதாதைகள் பட்ட இன்னல்களையும், அவர்கள் செய்த தவறுகளையும், அவர்கள் மூடக்கொள்கையையும், மடத்தனத்தையும், அவர்கள் பெற்றிருந்த சொற்ப அறிவையும், அவர்கள் செய்த நன்மைகளையும், அவர்களின் வீரத்தன்மையையும், எண்ணத்திலே ஓரளவுக்கு உருவகப்படுத்தி உணரலாம்.

இது ஒரு பெரும் பாதையாகும்! காட்டுமிராண்டி கால முதல், விஞ்ஞான காலம் வரை; குகைமுதல், மனிதத்தன்மைவரை; இலையாடைமுதல், நூலாடைவரை; காற்றிலாடும் நெருப்பின் ஒளி முதல் மின்சார ஒளி வரை; கல்லூனி முதல் ஆலைவரை, ஒரு பெரும் பாதையாகும்! ஊது குழல் முதல், தந்திவாத்தியம் வரை, மிதக்கும் கட்டை முதல், நீராவிக்கப்பல்வரை; பெரும் மரத்துண்டு முதல், சிறு—மெல்லிய கட்டை (ரீப்பர்ஸ்) வரை; உரல் முதல், அரைக்கும் பொறிவரை; உடைந்த குச்சிமுதல், ஏர்வரை; கைராட்டைமுதல், கனவிற்கும் அப்பாற்பட்ட அழகிய சித்திரத்தோடு இழையும் துணிவரை; சிறு தோல் முதல், பெருந்தோல் பதவிடும் முறைவரை; செங்கல் முதல், அச்செழுத்துபொறிவரை-வாசகசாலைவரை, ஒரு பெரும் பாதையாகும்! செய்கிதாக்கி முதல்—கால்நடை பயணம் முதல் மின்சாரப் பொறி (Spark) வரை; கத்தி, கல்லாயுதம் முதல் எஃகாயுதம் வரை, ஒரு நீண்ட பாதையாகும்! மணல் முதல், தொலை நோக்கி (Telescope) வரை; எதிரொலிமுதல் ஒலி யெழுத்துவரை—கோடுகள், புள்ளிகள் எழுப்பும் ஒலியிலே பொதிந்த உயிர்ச் சொற்களைக் கொடுக்கும் ஒலியெழுத்துவரை—பின் மடிந்த சொற்களுக்கு உயிர் கொடுக்கும் ஒலியெழுத்துவரை ஒரு பெரும், நீண்ட பாதையாகும்! தப்பட்டைமுதல், தொலை கேட்டி (Telephone) வரை—தொலைவிலே எளிதாகச் சொற்களைக் கேட்கவைக்கும்-நாணயம் ஒலிக்கும் ஒலி எவ்வளவு விரைவிலே செவியில் விழுகிறதோ, அவ்வளவு விரைவில், எளிதில் சொற்களைக் கேட்கச் செய்யும் தொலைகேட்டிவரை ஒரு பெரும் பாதையாகும்! விழுந்த மரம்முதல் சிறந்த, இடைபாதை (Bridge) வரை; காய்ந்து உலர்ந்த பெரும் மிருக எலும்பு முதல் எஃகுக் கம்பிகள்வரை; திருந்தாப் பொருள் முதல், சுற்றும் விசைவரை; குச்சி முதல் துப்பாக்கிவரை; சிறு கவண் முதல், பெரும் பேராயுதம்வரை, ஒரு பெரும் பாதையாகும்! பொறாமைமுதல், நீதிவரை; சிறு கூட்டம்முதல், அரசு அவைவரை; அடிமைமுதல், விடுதலைவரை; தோற்றம்முதல், உண்மைவரை; பயம்முதல், தெளிவுவரை; ஒரு பெரும் பாதையாகும்!

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

கள் 22—3—1949-க்குள் அறிவிக்குமாறு வேண்டுகிறோம்.

சி. இலக்குவன், எம். ஓ. எல்.,
தமிழ்ப்பேராசிரியர்,
செந்திற்குமார நாடார் கல்லூரி
விருதுநகர்,

குடி அரசு

12—3—49 சனிக்கிழமை.

திருவள்ளூரில் காமராஜர்!

சென்ற ஒருவார காலமாகத் தோழர் காமராஜர் அவர்கள், செங்கற்பட்டு வட்டாரத்தில் தீவிரமாகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார். சென்னை மேல்சபை உறுப்பினருள் ஒருவரான தோழர் முத்துரங்கனார் அவர்கள் காலஞ் சென்று விட்டதால் ஏற்பட்டிருக்கும் காலி ஸ்தானத்திற்கு, தோழர் சீனுவாசய்யர் என்கிற பேர் வழியை, எப்படியோ, எந்தக் காரணத்தினாலோ, காங்கரஸ் சார்பில் நிறுத்திவைக்கப்பட்டு, அவரை ஆதரித்துப் பேசித் தீரவேண்டிய நிலையில் தோழர் காமராஜர் இருக்கிறார்.

எப்படியோ? எந்தக் காரணமோ? என்று ஏன் கூறுகிறோமென்றால், இந்தத் துண்டு விழுந்த இடத்துக்குக் காங்கரஸ் சார்பாகவே நான் நிற்கிறேன் என்று தோழர்களான வேணுகோபால் ரெட்டி, ஆதிகேசவலு நாய்க்கர், மேயர் இராமசாமி நாயுடு ஆகிய மூன்று திராவிடர்கள், தனித்தனியே காங்கரஸ் கமிட்டிக்கு விண்ணப்பம் போட்டிருந்திருக்கிறார்கள். இந்த மூன்று பேரில் ஒருவர்கூட முத்துரங்கனார் இடத்துக்கு லாயக்கில்லை என்று தள்ளப்பட்டு, சீனுவாசய்யர்தான் அந்த இடத்துக்குப் பொருத்தமானவர் என்று காங்கரஸ் தெரிந்தெடுத்திருக்கிறதே, இதை நினைக்கும் போதுதான் எப்படியோ?, எந்தக் காரணமோ? என்று கூறவேண்டியதாயிருக்கிறது.

மேலும், இந்த சீனுவாசய்யர் என்கிற பேர்வழி, கோட்ஸே குலம் என்பது மட்டுமல்லாமல், கோட்ஸே கொலை ஸ்தாபன அநுதாபி என்றும், காந்தியார் கொலை கேட்டு கற்கண்டு வழங்கிய கண்ணியவான் என்றும் கூறப்படுகிறது. இந்தக் கொலைக் கும்பல் அநுதாபியைத் தேர்ந்தெடுப்பதற்கு, இப்போதைய மந்திரிசபையிலுள்ள சில மந்திரிகள்கூட பொறுப்பாக இருந்தார்கள் என்று வேறு சொல்லப்படுகிறது.

இவ்வளவும் காங்கரஸ் வட்டாரத்திலேயே பேசப்படும் பேச்சுக்கள்!

இந்த அநியாயமான—படுமோசமான தெரிந்தெடுப்பு, மிக மிகக் கண்டிக்க வேண்டியது. ஆனால் யார் கண்டிப்பது? இதைப் பற்றி யார் பேசுவது?—இது காங்கரஸ் வட்டாரத்தில் உள்ள, கடுகத்தனையாவது திராவிட உணர்ச்சியுடையவர்களின் திகில்!

திருச்சியில் தேவருக்குப் பதிலாக ஒரு அய்யர்! இன்று முதலியாருக்குப் பதிலாக ஒரு அய்யர்! ஆனால் தாத்தாச்சாரிக்குப் பதில் அவர் தம்பி! இது முறையா? கேட்கவேண்டுமென்றுதான் நினைக்கிறார்கள்; எப்படிக் கேட்பது?-இது காங்கரஸிலுள்ள உண்மைத் திராவிடர்களின் உள்ளத்திலுள்ள திண்டாட்டம்!

ஒரு திராவிடரின் இடத்துக்கு, மூன்று திராவிடர்கள் விண்ணப்பித்திருந்தும், அம்மூவரும் தள்ளப்பட்டு விட்டார்கள். அய்யருக்குள்ள அந்தத் தகுதி, எந்த யோக்கியதை இந்த மூவரில் ஒருவருக்குக்கூட இல்லாமல் போய் விட்டது?

இதை மற்றவர்கள் எண்ண மறந்தாலும், தள்ளப்பட்ட மூவராவது எண்ணித்தானே தீரவேண்டும். இருதயமில்லாத இயந்திரங்கள் என்று எப்படிக் கருத முடியும்?

இந்த அபத்தத்தை—காமராஜர் ஏதோ ஒன்றில் கொண்டிருக்கும் கரையற்ற காமவெறியால் விளைந்த விளைச்சலை—எடுத்துக் காட்டி, இது எந்தச் சதிவேலைக்காக? என்று கேட்டதினால்தான், பெரியாரவர்களையும் கழகத்தையும், பெரிதும் காய்ந்து கொண்டு வருகிறார் தோழர் காமராஜர்.

"காங்கரஸ் யாரைவேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கும். காங்கரசில் யார்வேண்டுமானாலும் பதவி பெறுவார்கள். இந்தப் பெரியாருக்கென்ன? இன்னாரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்ல இவருக்கென்ன யோக்கியதை?"-இது காமராஜர் கேட்கும் கேள்வி.

காங்கரசிலுள்ள திராவிடர்கள், எண்ணி எண்ணி மனங் குமுறினாலும் எடுத்துக்கூற—அதட்டிக் கேட்க அச்சங்கொண்டிருக்கும் போது நம்மை—நம் நடத்தையை அம்பலத்துக்குக் கொண்டுவருவதா என்கிற ஓரே ஒரு பொச்சரிப்பைத் தவிர வேறு இதற்கு என்ன நியாயம் கூறமுடியும்?

காங்கரஸ் ஒரு பார்ப்பனீயப் பண்ணை, மேலும் பனியாக்களின் கூட்டுப் பண்ணை என்பது நாம் இன்று நேற்றுக் கூறுவதல்ல. அதற்கான ஆதாரங்களையும், உண்மைகளையும் அதன் நடத்தைகளிலிருந்தே அவ்வப்போது எடுத்துக் காட்டிவருகிறோம். அந்த முறையில்தான் முதலியாருக்குப் பதிலாகவும் ஒரு கோட்ஸேயா என்று கேட்கிறோம். இதைக் கேட்கும் போதுதான் பெரியாருக்கு என்ன உரிமை என்று ஓலமிடுகிறார் காமராஜர்.

சட்டசபையைக் கைப்பற்றும் திட்டம், எங்களுக்கில்லை என்று நாம் வெட்ட வெளிச்சமாகக் கூறி, எந்தத் தேர்தலிலும் நாங்கள் ஈடுபடமாட்டோம் என்று நாம் சொல்லிவிட்ட போதிலும், காங்கரஸ் பீடமேறிகள் நம்மைத்தான் உண்மையான எதிர்க்கட்சி என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். மன்றத்தில் இல்லாவிட்டாலும், மக்கள் முன்பு உள்ள பலமான எதிர்க்கட்சி என்று பேசுகிறார்கள்.

இது உண்மை என்றே வைத்துக் கொண்டாலும் கூட, ஒரு கட்சியின் சார்பில் நிறுத்தப்படும் ஒரு அபேட்சகரைப் பற்றி, அவர் எப்படிப்பட்டவர்? எவ்வளவு தகுதியுடையவர்? என்பதை அந்தக் கட்சியானது மக்கள் முன்னால் கூறும்போது, எதிர்க் கட்சியென்பதினுடைய வேலை என்ன? இதை அறியக் கூடிய திறமைகூட நம்

காமராஜருக்கு இல்லை என்றால் அது யாருடைய தவறு?

காங்கரஸ் வளர்ச்சி-பார்ப்பனீய வளப்பம், காங்கரஸ் ஆட்சி-பார்ப்பனீய ஆதிக்கம் என்று எடுத்துக் காட்டிவரும் நாம்—அதற்கு எடுத்துக் காட்டாக நடந்து வருகிற பல செயல்களையும் மக்கள் முன்பு விளக்கிவரும் நாம், முதலியாரின் இடத்துக்கும் முகத்தில் பிறந்தவர்தானா? என்று எப்படிக் கேட்காமல் இருக்க முடியும்? இதைக் கேட்பதுதானே — இந்த அக்கிரமத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதுதானே—காங்கரஸ் என்பது பார்ப்பனீயத்தின் கண்ணி என்பதை, மக்கள் உணரச் செய்ய வேண்டுமென்பது தானே, கழகத்தின் இப்போதைய வேலைத் திட்டங்களுள் ஒன்று. இதையுணரக் கூடிய உணர்வு கூட நம் காமராஜருக்கில்லை யென்றால் கழகத்தைப் பற்றிப் பேசவோ, கழகத் தலைவரைப் பற்றிப் பேசவோ இவருக்கென்ன யோக்கியதை? நாம் கேட்கவில்லை, அவரே எண்ணிப் பார்க்கட்டும்!

காங்கரஸ் கமிட்டித் தலைவர் என்கிற "பட்டுக் குஞ்சம்" அவிழ்ந்து விடுமேயானால், தோழர் காமராஜரின் யோக்கியதை என்ன? என்பதை நாம் கேட்கவில்லை. அவர் சிந்தனைக்கே விட்டுவிடுவோம். சிந்தனைக்குப் பிறகு கூறட்டும்; கழகத்தைத் தவிர வேறு யாருக்கு யோக்கியதை யுண்டென்று.

தேர்தல் பிரசாரத்திலிறங்கித் திராவிடக்கழகத்தைத் திட்டிவரும் தோழர் காமராஜர்,

"காங்கரஸ் செய்து வரும் சேவைகளை ஞாபக மூட்டவே நான் இந்த சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டேன்" என்று திருவள்ளூரில் கூறுகிறார்.

காங்கரஸ் செய்திருக்கும் சேவையை — ஏழை மக்களை உறிஞ்சியிருக்கும் உறிஞ்சலை, காமராஜர் ஞாபகமூட்டித்தானா மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும்? எந்தெந்த வகையில் நாம் எதை எதை இழந்தோம் என்கிற அறிவு—மஞ்சள் பெட்டியை நிரப்பியதால் வாழ்வுக்கே உலை வைத்துக்கொண்டோமே என்கிற சிந்தனை—மக்களிடம் கிளர்ந்தெழுந்திருக்கும் இந்நேரத்தில்தான், தோழர் கூறுகிறார் காங்கரசின் சேவையை ஞாபக மூட்டுவதற்காக வென்று.

இருக்கட்டும்; காங்கரஸின் சேவை என்று காமராஜர் கூறுவது, எந்தக்காலத்து, எந்தக் காங்கரசின், எந்தச் சேவையை?

தமிழ்நாட்டின் தனிப்பெரும் தலைவர்களான மும்மணிகள் காலத்துக் காங்கரசின் சேவையையா? விபீஷணக் கும்பல்கள் ஆழ்வார்களாக்கப்பட்டு, வேதியர்களின் ஆட்சிக்கு வித்தூன்றப்பட்ட காலத்துக் காங்கரசின் சேவையையா? பனியாப் பார்ப்பனக் கூட்டு ஒப்பந்தத்தின் மீது ஏகாதிபத்தியம் கட்டப்பட்டுவரும் இந்தக்காலத்துக் காங்கரசின் சேவையையா?

முந்தியதைச் சொல்வதென்றால்—மும்மணிகள் காலத்தை ஞாபகப்படுத்துவதென்றால், அது காமராஜருக்கு முடியாத வேலை மட்டுமல்ல; புரியாத வேலையுமாகும். எவ்வளவு கரடுமுரடான நிலத்திலே, ஆடாமல் அசையாமல் செல்ல, தார் ரஸ்தா போடப்பட்டிருக்கிறது என்பதைக் காரில் செல்லும் மைனர் எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? மைனர் நிலையிலுள்ள காமராஜர், மும்மணிகள் காலத்தை ஞாபகப் படுத்துவதென்றால் அது அவரால் முடியக்கூடிய வேலையா? ஆகவே அதை அவர் ஞாபகப் படுத்தமுடியாது என்பதால் விட்டு விடுவோம்.

விபீஷணக் கும்பல்கள் ஆழ்வார்களாக்கப்பட்ட காலத்தில், வேதியர்களின் ஏவலால் இந்நாட்டு வீரமறவர்கள் பலியாக்கப்பட்ட படலத்தில், சேவை செய்ய முடியாவிட்டாலும், இதை இதைச் சாதிப்போம் என்று வர்ணித்ததை — மக்கள் முன்னால் கூறிய வாக்குறுதிகளைத் தான் இவர் ஞாபகப்படுத்த முடியுமா?

"ஏழை மக்களுக்குத்தான் உறுதி கூறி வந்திருக்கிறோம். ஆனால் 19 ஆண்டுகளாகக் கூறி வருகிறோம். ஆகவே அதுதான் காலாவதியாகிவிட்டதே"

என்று கிருபளானி மத்திய சட்டசபையில் இந்த மாதம் 6ம் தேதி கூறியிருக்கிற—காலாவதியான வாக்குறுதிகளைப்பற்றித் தான் இவர் எப்படி ஞாபகப்படுத்திவிட முடியும்? வேதனைதரும் நினைவை—ஏமாற்றப்பட்ட எத்து வேலையை, காமராஜர் விளக்குவார் என்றுதான் எப்படி எதிர்பார்க்க முடியும்? ஆகவே அதையும் விட்டு விடுவோம்!

பனியாப் பார்ப்பனக் கூட்டு ஒப்பந்தத்தின் மீது, ஏகாதிபத்தியம் எழுப்பி வரும் இக்காலத்தில் தான், காங்கரசினால் உண்டான சேவை என்பதாகக் காமராஜர் எதைக்கூற முடியும்?

இரவில் நிர்மாணமான ஏகாதிபத்தியத்திற்கு முதல் பலியாக, காந்தியார் படுகொலை செய்யப்பட்ட பாதகத்தை—நிர்வாகத்தினரின் ஏமாளித்தனத்தை—பார்ப்பனீயத்தின் வெற்றி விழாவை, இவர் காங்கரஸின் சேவை என்பதாகக் கூறமுடியுமா?

ஏழை இந்தியாவின் பேரால், எத்தனையோ கோடிக் கணக்கான பொருள்களை வாரி யிறைத்து, இந்தியாவைத் தவிர்த்த வெளி நாடுகளில் எல்லாம் இந்தியாவின் சுதந்தர மணத்தை வீசச் செய்திருப்பதை, இவர், காங்கரசின் சேவை என்று கூற முடியுமா?

சியாங்கே—ஷேக்கையும் தோற்கடிக்கும் முறையில், சுற்றத்தினரையும், தன்னினத்தாரையுமே படாடோபமான பதவிகளுக்கெல்லாம் அமர்த்தி வரும், நேரு பார்ப்பனரின் நேர்மையற்ற நடத்தையைக் காங்கரசின் சேவை என்று, இவர், கூற முடியுமா?

கடைத் தெருக்களிலும், மார்க்கட்டுகளிலும், மூலை முடுக்குகளிலும் எங்கு பார்த்தாலும், ஆட்சி நிர்வாகத்தின் லஞ்ச ஊழலைப் பற்றியே அனைவரும் பேசுகிற பேச்சை, இவர், காங்கரசின் சேவை என்று கூற முடியுமா?

இப்படியாக நாம் கேட்கவில்லை; காங்கரசின் தலைவராயிருந்த தோழர் கிருபளானி கேட்கிறார். இதற்கு நம் காமராஜர் என்ன பதில் கூறுவாரோ?

உண்மையிலேயே இந்தத் தேர்தல் பிரசாரத்தில், எங்கேயாவது காமராஜர் காங்கரஸ் சேவையைக் குறித்துப் பேசியிருக்கிறாரா என்று பார்த்தால் ஒரு இடத்திலாவது அவர் அதைப பற்றி பேசவில்லை. அது மட்டு மல்ல, இப்போது காங்கரஸ் மந்திரிகளால் கொண்டு வரப்பட்டிருக்கும் மட் நிர்வாக மசோதாவைப் பற்றிக் கூட ஒரு வார்த்தை பேசவில்லை.

அப்படியிருந்தும் அவர் ஆரம்பிக்கிறார் 'நான் காங்கரசின் சேவையை ஞாபகப் படுத்துகிறேன்' என்று. ஒருவேளை திராவிடக் கழகத்தைத் திட்டுவதுதான் காங்கரசின் சேவை என்று கருதிக் கொண்டிருக்கிறாரோ என்னமோ! அப்படிக் கருதுவாரானால் அவருக்காக நாம் இரங்குவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

"நாயக்கரின் பார்ப்பனரல்லாதார் கூச்சல் எனக்குப் புரியவில்லை. அவருடைய கொள்கையே எனக்குப் பிடிபடவில்லை."

இப்படிக் கூறுகிற காமராஜர், கழகத்தைக் குறை கூற மட்டும் எப்படி முடிகிறது? பார்ப்பனரல்லாதார் கூச்சலே (ஆமாம்! கூச்சல்) புரியாதவர், நாயக்கருடைய கொள்கையே பிடிபடாதவர், நாயக்கருடைய கொள்கையைக் கண்டிக்கிறார்! ஆச்சரியம்! மனதுக்குப் பிடிபடாமல் அறிவுக்குப் புரியாமல் இருக்கிறது என்று அவரே கூறுகிறார். அப்படிப் பிடிபடாத ஒன்றை, புரியாத ஒன்றை அவரே கண்டிக்கிறார். இதற்குப் பெயரென்ன?... புரியாததை, புரியவில்லை என்று கூறுவதைக் கேட்டு வரவேற்கிறோம்; புரிய வைக்கவும் முயற்சிக்கிறோம். ஆனால் புரியாத ஒன்றைக் கண்டிக்க முன்வருகிற, புத்தித் திறமைக்கு என்ன செய்வது?

1. "சீனுவாசய்யருக் கெதிராக மேயர் ராமசாமி நாயுடுவைப் போட வேண்டுமென்கிறார் பெரியார். ஆனால் அன்று கார்ப்பரேஷன் தேர்தலில், அந்த ராமசாமி நாயுடுக் கெதிராக அவருடைய கட்சியினர் போட்டியிட்டதை அவர் தடுக்கவில்லை."

2. "ராஜாஜி காங்கரசை எதிர்த்துப் பிரசாரம் செய்தபோது அவரைக் கண்டிப்பதில் என்னுடன் ஒத்துழைத்தார் இந்தச் சீனுவாசய்யர்! ஆனால் ஜப்பான்காரனைக் காரணமாகக் காட்டி, யுத்தத்துக்கு ஆதரவு தரவேண்டுமென்று, ராஜாஜியுடன் சேர்ந்துகொண்டு காங்கரசுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்தார் இந்தப் பெரியார்"

3. "ஒரு தடவை ஓமாந்தூராருக்கு எதிராக ஒரு பார்ப்பனர் போட்டியிட்டார். அப்பொழுது அந்தப் பார்ப்பனனை ஆதரித்தார் இந்தப் பெரியார்."

பெரியாரின் கொள்கை—பார்ப்பனரல்லாதார் கூச்சல், புரியவில்லை என்று கூறும் காமராஜர், அதற்கு எடுத்துக் காட்டாக இந்த மூன்றையும்தான் கூறுகிறார். ஆனால் முடிவில், பெரியாருடைய வேலையே காங்கரசின் செல்வாக்கைக் குலைப்பதுதான் என்று முடிக்கிறார்.

புரியவில்லை என்று கூறியது உண்மையா? காமராஜர் கட்டியிருக்கும் முடிவு உண்மையா? முன்னது உண்மையென்றால் பின்னது பொய்! பின்னது உண்மை என்றால் முன்னது பொய்! இப்படி முன்னுக்குப் பின் முரணாக ஏன் பேசவேண்டும்? அதுவும் ஒரே இடத்தில்? மக்கள் இதைக்கேட்கமாட்டார்கள் என்கிற அந்த "மூட நம்பிக்கையே" தவிர வேறு இதற்கு என்ன காரணம் கூற முடியும்?

வடநாட்டு ஆதிக்கத்தையுடைய காங்கரஸ் ஸ்தாபனம், தென்னாட்டில் வளரும் வரையிலும்—அதன் ஆதிக்கம் நிலைத்திருக்கும் மட்டும், தென்னாட்டு மக்களுக்கு உய்வில்லை! வாழ்வில்லை! பார்ப்பனீயத்தின் பாதுகாப்புக்குரிய ஒரே ஒரு பெரிய ஸ்தாபனம் காங்கரஸ் ஒன்றுதான். அது என்றைக்கு ஒழிகிறதோ—அல்லது அந்தப் பார்ப்பனீயம் என்றைக்கு அதை விட்டு ஒழிக்கப்படுகிறதோ, அதுவரை திராவிடர்களுக்குச் சுதந்தரமில்லை, சுயேச்சையில்லை; அது மட்டுமல்ல மனிதர்களாகக்கூட மதிக்கப்படமாட்டார்கள். ஆகவே பார்ப்பனீய அடிமையானகாங்கரஸ் பட்டொழியவேண்டும் என்பதுதான் காஞ்சிபுரத்தில் அன்று பெரியார் முழக்கிய முழக்கம்! அந்த முழக்கத்தின் எதிரொலிதான் சுயமரியாதை இயக்கம்! அந்த இயக்கத்தின் இன்றைய வளர்ச்சிதான் திராவிடக்கழகம்!

இந்த வுண்மையை அன்று ஒப்புக்கொள்ளாத தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள், இன்று வற்புறுத்திக் கூறுகிறார் "நான் வளர்த்த காங்கரஸ் என் காலத்திலேயே இறந்தொழியவேண்டு"மென்று. இவற்றை எண்ணிப் பார்க்கும்திறமைகம்காமராஜருக்கு இருக்குமானால், இந்த மூன்று நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டிருக்கவே மாட்டார். இது நிச்சயம்! ஏன் அவருடைய விவாதத்திற்கே அவை பல வீனத்தையுண்டாக்கும். அவர் கூறுவதைப் போல, அதாவது அவர் முடிவு கட்டுவதைப்போல, மேலாகப் பார்த்தால் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிற இந்த நிகழ்ச்சிகள் மூன்றும், காங்கரஸ் இந்த நாட்டில்—தென்னாட்டில் செல்வாக்குப் பெறக்கூடாது என்ற நோக்கத்தோடு செய்யப்பட்டது தான் என்பதை அவரே ஒப்புக்கொள்ளும் போது-புரிந்து கொண்டிருக்கும் போது, எனக்குப் புரியவில்லை—பிடிபடவில்லை என்கிறார் என்றால் அவரைப் போன்ற ஒரு "தோலிருக்கச் சுளை விழுங்கி" வேறு யார் என்றுதானே கேட்கத் தோன்றும்.

ஆகவே, அவருக்குப் புரியும்படியாக—தெளிவாகும்படியாகச் சொல்லுகிறோம், இந்த நாட்டில் என்றைக்குப் பார்ப்பனீய அடிமையான காங்கரஸ் ஒழிகிறதோ, அன்று தான் இந்தத் தென்னாட்டு மக்களுக்கு வாழ்வு என்று. மேலும் சொல்லுகிறோம்; இவ்வுண்மையை இன்று மட்டுமல்ல, அன்று காஞ்சியிலிருந்தே ஆரம்பித்து வெளிப்படையாகக் கூறி வந்திருக்கிறோம் என்று. இன்னும் சொல்லுகிறோம்; எங்களின் முயற்சி தகர்க்கப்பட்டு, நாங்கள் ஒடுக்கி ஒழிக்கப்பட்டாலும்கூட, வடநாட்டு ஆதிக்கக் காங்கரசின் வாழ்வு—தென்னாட்டு மக்களின் தாழ்வு என்று.

நிற்க, தோழர் காமராஜர் அவர்கள் இந்தச் சுற்றுப் பிரயாணத்தில், ஒன்றுக் கொன்று முரணாகப் பலவற்றை உளறிக் கொட்டியிருக்கிறார்.

"அன்னிய ஆட்சியை ஆதரித்தவர்கள், புதுபணக்காரர்கள், பெரிய மிராசுதாரர்கள், மில் முதலாளிகள், கருப்புச்சட்டைக்காரர்கள், செஞ்சட்டைக்காரர்கள், லைசென்ஸ் பெறாத காங்கரஸ்காரர்கள் ஆகிய இத்தனை பேரும் சேர்ந்த—பிற்போக்காளிகளின் அய்க்கிய முன்னணிதான்—இன்றையகாங்கரஸ் எதிர்ப்பு என்று திருவள்ளூரில் கூறும் இவர், மதுராந்தகத்தில் அலறுகிறார் பெரியார் எதைத்தான், யாரைத்தான் கண்டிக்கவில்லை என்று!

"தன்னைத் தவிர உலகத்தில் உள்ள எல்லோரையுமே கண்டித்து வெறுத்தொதுக்கும் பெரியார்" என்று மதுராந்தகத்தில் முடிவு கட்-

டுகிறார் காமராஜர்.

"காரங்கரசைத் தவிர்த்து, மற்ற எல்லோரோடும் சேர்ந்து கொண்டு பிற்போக்காளிகளின் அய்க்கிய முன்னணியை அமைக்கிறார் பெரியார்" என்று திருவள்ளூரில்முடிவு கட்டுகிறார் அவர்.

"பணக்காரர்கள் எல்லாம் காங்கரசில் புகுந்து கொண்டு விட்டார்கள்" என்று பதைபதைக்கிறார் மதுராந்தகத்தில்.

"பணக்காரர்கள் எல்லாம் பெரியாரோடு சேர்ந்து கொண்டு அய்க்கிய முன்னணி அமைக்கிறார்கள்" என்கிறார் திருவள்ளூரில்.

"பர்மாவின் கரீன்காரர்களைப் போலக் குழப்பம் செய்து, தனி ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் பெரியார் முயலுகிறார்" என்கிறார் திருவள்ளூரில்.

"சில்லரைக் குழப்பங்களைச் செய்து கொண்டிருக்கிறார் நாயக்கர். பெரிய குழப்பங்கள் அவருக்குச் செய்யத்தெரியாது, தைரியமுமில்லை" (அட! சூரப்புலியே) என்கிறார், பின்னால், அதே திருவள்ளூரில்.

இந்த உளறல்களைக் கேட்டு (அவரின் கெஜட்டாக இருக்கும் தினசரியில் பார்த்து,) அந்தோ! ஒரு திராவிடரின் மூளை ஒரு நாகராஜரின் கூட்டுறவால் இப்படியா சிதறடிக்கப்படவேண்டும்? என்று நம்மால் வருந்தாமல் இருக்கமுடியவில்லை. இந்த நேரத்தில் இதிகாச புராணங்களில் காணப்படும் வீர வம்சங்கள் எல்லாம், எப்படி வெந்தொழிந்து சாம்பலாகி, இழிவை நிலைநிறுத்திப் போய்விட்டன என்பதும் நம் நினைவுக்கு வராமல் இல்லை.

இன்னும் காமராஜரின் 'சரித்திர ஞானம்'', ''அரசியல் திறமை'' ஆகியவற்றின் பல அசட்டுத் தனங்களை இங்கு நாம் எடுத்துக் காட்டாமல் நிறுத்திவைத்திருக்கிறோம். தேவைப்படுமானால் பிறகு பார்க்கலாம்.

ஆனால் முடிவாகக் காமராஜருக்கு நாம் வற்புறுத்திக் கூறுவது இதுதான்.

திராவிடக் கழகத்தின் உழைப்பு, பெரியாரின் தொண்டு, இல்லாவிட்டால், இவரைப் போன்ற அய்ந்தாம்தர, ஆறாந்தர ஆசாமிகள் எல்லாம், எப்படிப் பெரிய அரசியல் மேதையாக— காட்டின் ராஷ்டிரபதியாக விளங்க முடியும்? இன்று சில பார்ப்பனர்களால் தூக்கிவைக்கப்படுகிறார் என்றால் அதற்கு உண்மையான காரணமென்ன? இதை எண்ணக்கூடிய புத்தியை எங்கேயோ வைத்துவிட்டு, "சும்மா இருக்கிறீர்களா சுய ரூபத்தைக் காட்டட்டுமா" என்பதுபோல வீண் மிரட்டல் மிரட்டுவதால் என்ன லாபம்? வேண்டுமானால்வேலையில் இறங்கட்டும்! விளைவை அநுபவிக்கட்டும்! ஆனால் ஆழந்தெரியாமல் காலை விடுகிறார் என்பதுதான் நம் எச்சரிக்கை!

(7ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பினும் இப் பெரும் பாதையை மனித சமுதாயம் கடந்துவிட்டது. எண்ணிலா எதிர்ப்புகள் எதிர்ப்பட்டன; எண்ணிலா எதிரிகள் எட்டிப் பிடித்தனர்; ஆயினும் ஆயிரமாயிர வெற்றிகள் உண்மைக்குக் கிடைத்தன. கோடிக்கணக்கானவர்கள் உயிர் வாழ்ந்து, உழைத்துத் தம் துணைத் தோழர்களுக்காக உயிர் விடுத்தனர்.

நாம் மகிழ்வுறும்ஆசீர்வாதத்துக் கெல்லாம், நாம் கொண்டாடும் மகிழ்ச்சிகட்கெல்லாம், நாம் என்றுமே நன்றியுடையவர்களாயிருத்தல்வேண்டும். நம் உள்ளங்கள் நன்றியினால் மலர்ந்திருக்க வேண்டும்.

நாம் யாருக்கு என்ன விதமாக நன்றி கூறவேண்டும்?

நாம் நீதியும் நேர்மையாளராகவும் சிந்திப்போம்.

நாம் ஆலயங்கட்கு நன்றி கூறலாமா?

கிருஸ்து மதம், கிருஸ்து கொள்கையை, பதினைந்து நூற்றாண்டுகளாக அடக்கி ஆண்டுவந்திருக்கிறது.

இப்பல நூற்றாண்டுகளாக, அய்தீக ஆலயங்கள் மனித நன்மைக்காக யாது செய்துள்ளது?

மனித வாழ்க்கையிலே முக்கியமான தேவைகள், உணவு, உடை, வீடாகும். மனிதன் தன்னை வெப்பத்தினின்றும், குளிரினின்றும், பனியினின்றும், புயலினின்றும்காப்பாற்றிக் கொள்ள வேண்டியவனாக இருக்கின்றான். அவன் வருங்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியவனாய் இருக்கின்றான். கோடை இளமையிலே, அவன் குளிர்ப் பருவத்தை எண்ணி அதற்கு உகந்த முறையிலே தன்னைத் தயார் செய்து கொள்கிறான். நோய்களின் காரணத்தையும், சுகத்தின் முறைகளையும் அவன் கொஞ்சமாகினும் அறிந்திருக்க வேண்டியவனாயிருக்கிறான். முடியுமாயின் நோய்களை முறியடிக்கவும், மகிழ்ச்சியை அதிகமாக்கிக்கொள்ளவும், அவன் வாழ்வை நீடித்ததாக ஆக்கிக் கொள்ளவும் அவன் தெரிந்திருக்க வேண்டியவனாயிருக்கிறான். அவன் உடலுக்குத் தேவையானவைகளைக் கொடுக்கவும், அறிவுப் பசியைத் தணித்துக் கொள்ளவும் வேண்டியவனாயிருக்கிறான்.

திருமண நன்றியறிவிப்பு.

கடந்த 1949-ஆண்டு மார்ச்சு திங்கள் 2-நாள் புதன்கிழமை சேலம் செவ்வாய்ப்பேட்டை பட்டுஜவுளி வியாபாரம் தோழர் கே. கே. கெணிவீரசெட்டியார் புதல்வி "செல்வி. பங்காருவை," தோழர் பி. வி. செங்கல்ராயசெட்டியார் புதல்வன், "செல்வன் ராஜகோபாலனுக்கும்" தோழர் கே. கே. கெணிவீரசெட்டியார் தமையனார் புதல்வன், "செல்வன் மன்னாருக்கு," தோழர் பி. வி. செங்கல்ராய செட்டியார் புதல்வி "செல்வி பங்காருவையும்" வாழ்க்கைத்துணைவிகளாக ஆக்கிய திருமணத்தின் பொழுது மணமக்களுக்கு உள்ளூர் வெளியூர்களிலிருந்து வாழ்த்துச் செய்திகளையும் பரிசுகளையும் அனுப்பி, எம்மை பெருமை படுத்திய உள்ளூர் வெளியூர் நண்பர்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வணக்கம்

கே. கே. கெணிவீர செட்டி,

பி. வி. செங்கல்ராய செட்டி.

[திருமணத்தின் நினைவாக அனுப்பிய நன்கொடை ரூபாய் 10-ம் வரப் பெற்றோம். நன்றி! ஆ-ர்]

திருக்குறள் அறம்!

★

II.

(சென்றவாரத் தொடர்ச்சி)

அறநூலாகிய குறளின் பெருமையை உணர்ந்த சங்ககாலப் புலவர்கள் அதை "அறம்" என்றே அழைத்தனர்.

'நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே ஆயிழைகணவ'

என்ற ஆலத்தூர்கிழார் என்ற சங்கப்புலவரின் சொற்கள் இதை நமக்குத் தெளிவுறுத்துகின்றன. எனவே வடநாட்டாரின் பிரமச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற வாழ்வு முறைகளையும், நான்கு வேதங்களையும் பின்பற்றியோ—அல்லது பின்பற்றாவிட்டாலும் அம்முறைகளைப்போல் தமிழ் முறைகளையும் வகுக்க விரும்பியோ சிலர் குறளையும் அம்மாசுகளுக்கு உட்படுத்துகின்றனர். அறம், பொருள், இன்பத்துடன் "வீட்"டையும் இன்னற்பட்டு சுற்றிவளைத்து விலைக்கு வாங்குகின்றனர். இம்முறை இனி மாறவேண்டும், விரைவில் மாற்றப்படவேண்டும் என்பது என் அவா. குறளை 'மறை' என்று கூறாது, நம் முன்னோர் கூறியபடி 'அறம்' என்று கூறவே ஆசைப்படுகிறேன்.

'அறம்' பற்றி வந்த குறள் அதற்கு வழிகாட்டியான அறிவை, அதை வளர்க்கும் கல்வி கேள்வியை, பெரியோர் நட்பை, துணையான பொருளை, நிலைக்களனான மனத்தை, அம்மனத்தினின்றும் நீக்க வேண்டிய பொறாமை சினம் சோம்பல் கயமை முதலிய பலவற்றை, கைக்கொள்ளவேண்டிய முயற்சி ஊக்கம் ஈகை அன்பு அருள் நட்பு கொல்லாமை என்றமிகப்பலவான நன்மைகளை, இவற்றை வெளிப்படுத்த, வளர்க்க வழிவகுக்கும் வாழ்வை—இல்லறத்தை, அதைத் தோற்றி வளர்க்கும் காதலை, அதை நிலைநிறுத்தும் நாட்டை, அரசை என்று இவ்வாறு அறஅடிப்படையில் நின்று பல நூறு துறைகளில் விரித்துரைக்கின்றது.

எனவே அறத்தைப்பற்றி உணர ஆசைப்படுபவர்களுக்கு "குறள் முழுவதையுமே கற்கவேண்டியது தான்" என்றே நாம் கூறமுடியும். ஆனால் முன்னைய பல கட்டுரைகளில் செல்வத் துணையையும், அறிவு வழியையும் அறிந்த நாம் "அறம்" என்ற சொல்லுடன் தொடர்புடைய ஒரு பொதுவான கருத்தைத்தான் தேசப் படத்தின் கோடுபோல இக் கட்டுரையில் வரையறுத்து உணரமுடியும். இது வரை அறம் என்றால் என்ன என்பதையும், அதற்குப் புறம்பான "தருமம்" அறத்துடன் கலந்து நம் அறிவையே மழுங்கச் செய்த வரலாற்றையும், குறள்—

"அண்ணல்"

அற—நூல் அறத்தைப்பற்றிக் கருதி, கூறியுள்ள அமைப்பு முறைகளையும் அறிந்தோம். இனி அறத்தைப்பற்றிப் பார்ப்போம்.

குற்றமற்ற மனமே 'அறம்' என்றவர், பின்னர் தனித் தனியே நீக்க வேண்டிய குற்றங்களை முறைப்படி கூறுகின்றார். கைக்கொள்ள வேண்டிய அன்பு, நல்ல பண்பு முதலியவற்றையும், அவ்வாறே தனித் தனியே விளங்கக் கூறுபடுத்திக் கூறுகின்றார். ஆனால் ஒருவன் 'அறம்' உடையவன் என்பதை—அவ்வறம் நிறைந்த உள்ளத்தை வெளி உலகிற்கு உணர்த்துவன யாவை? உணர்த்துவது எப்படி? என்றால் 'முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி, அகத்தானாம் இன் சொலினதே அறம்' என்கிறார் வள்ளுவர். காண இனிக்கும் இனிய முகமும், கருத்தைக் கவரும் இனிய பேச்சும்—உள்ளத்திலிருந்து வெளிப்படவேண்டும்—அறமுடைய அறிஞனுக்கு! 'அகத்தானாம் இன் சொல்' என்று கூறுகிறார் வள்ளுவர். எங்கே, யாராவது இதை வைத்துக் கொண்டு 'போலி வேஷம்' போடத் தொடங்கிவிடுவார்களோ என்று!

நீக்கிவிட வேண்டிய—நெஞ்சில் 'துறக்க' வேண்டிய கெட்ட பண்புகளை வரிசைப்படுத்திக் கூறும் வள்ளுவர் அவற்றுள் மிகமுக்கியமான, 'அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் (பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல்) நான்கும் இழுக்கா இயன்றது அறம்' என்று கூறுகிறார். இந்த நான்கு தீயபண்புகளின் தொடர்பு சிறிதும் இல்லாதது தான் அறம் எனப்படும் என்கிறார். மேலும் 'அறவினை யாதெனிற் கொல்லாமை' என்று உயிர்களைக் கொல்லாத நோன்பையே தலை சிறந்த அறமாகக் குறிப்பிடுகிறார்.

அறமும், அறிஞனும்!

அறிஞன் என்றால் அவன் அறவழி நிற்பவனாக இருக்க வேண்டும். அவன் சொற்கள் தன் தன்மை, பிறர் தன்மை இவற்றையறிந்து பேசப்படுவனவாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் அவனிடம் பொருள் சேரும். 'அறன் அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும் திறனறிந் தாங்கே திரு', என்றும்; "திறனறிந்து சொல்லுக சொல்லை, அறனும் பொருளும் அதனினூஉங் கில்" எனவும் குறள் கூறுகின்றது. எனவே இவ்வாறு வாழ்பவன், பிறர்க்குப் பயன்படுபவனாக இருப்பான். இவன் துணையாலேதான் அறம் வளர முடியும். உலகிற்கு இவனே ஏற்ற துணைவன் என்று அவனை உயர்வுபடுத்தி உரைக்கின்றார் வள்ளுவர். 'அறன் அறிந்து ஆன்றமைந்த சொல்லான், திறனறிந்தான் தேர்ச்சித் துணை' என்பது குறள். அது மட்டுமன்றி அத்தகையவர்களையே 'துணை'யாகக் கொள்ளும்படி மக்களுக்கும் அறிவுறுத்துகின்றார்—'அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை, திறனறிந்து தேர்ந்து கொளல்—கொள்க! என்று!

(அடுத்த இதழில்)

[4ம் பக்கத் தொடர்ச்சி]

இல்லாத சமயம் அவள் தன் மாமனுக்குமாலையிட்ட செய்திகேட்டு, மனம் வெதும்பி மறுமாதமே என் திருமணத்தையும் முடித்துக் கொண்டேன். ஓராண்டு ஓடிவிட்டது.

இந்த ஓராண்டுக்காலமும் அவள் என் வீட்டு வழியாகத்தான் நாள் தவறாமல் மாலையில் சிவன்கோயிலுக்குச் செல்லுவாள். என்றாவது ஒவ்வோர் நாள்நான் தெருத் திண்ணையில் உட்கார்ந்திருப்பேன். கட்டைவிரலை நோக்கியவண்ணம் சென்று கொண்டிருக்கும் அவள், சற்று நிமிர்ந்து என்பால் தன் கண்களைத் திருப்புவாள். சிரிப்பாள். என் தங்கையைப் பார்ப்பதுபோல் பார்ப்பேன். ஒரு நாள் மாலை, திரும்பி வருகையில், வளையல் செய்யப் பவுன் தருவதாகவும் மறுநாள் காலையில் வீட்டுக்கு வருமாறும் சொல்லிவிட்டுப் போய்விட்டாள். நானும் மறுநாள் காலை சென்றேன். ஆண்கள் இல்லாததால் உள்ளே செல்ல அஞ்சினேன். அஞ்சாமல் உள்ளே வரச் சொன்னாள் அந்த வஞ்சி. உள்ளே சென்றதும் ஓராண்டு நிகழ்ச்சிகளையும் அப்படியே சோகங் கலந்த குரலில் கூறினாள். என்னை மணம் புரிந்து கொள்ள வேண்டி, எவ்வளவோ தாயாரிடம் வேண்டியும் உடன்படாமல், தன் தம்பி பெரிய அறிவாளி, அழகன், அந்தஸ்துடையவன் என்று ஏதேதோ கூறி அவள் மனதைக் குழப்பி, அவள் தாயார் தன் தம்பிக்கே தன்னை மாலையிடச் செய்த செய்திகளையும், மணவிழாவின் பின் அவனது குரூரத் தன்மையையும், உருவத்தையும் கண்ட புஷ்பம், பள்ளியறை வாழ்க்கையில்லாமலே நடந்து வருவதையும் கூறி அழுதாள். இனி தாங்கள் தான் எனக்குக் கதி. எங்காவது ஓடிப்போயாவது பிழைத்துக் கொள்வோம். என்னைத் தாங்கள் மறுத்தீர்களேயாகில் நான் விஷமருந்தி மரிப்பது உறுதி என்றாள். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போலிருந்தது அவள் பேச்சு. நான் மௌனம் சாதித்தேன். "ஸ்வாமி தங்கள் தரிசனத்துக்காகத்தானே நான் நாள்தோறும் சிவன் கோவிலுக்குப் போனேன்...என்றாள். இரத்தப் புத்தி அன்றில்லாமல் போய்விட்டது. என் மனைவிக்கு நான் வழி சொல்லியாக வேண்டும். நான் வருகிறேன் என்று கூறி வெளியே வர முயன்றேன். என் காலை இறுகப் பிடித்துக் கொண்டு, என்னை ஏற்றுக் கொள்ள மாட்டீரா என்றாள். முடியவே முடியாது என்று வேகமாகக் கூறிக் கொண்டு வெளியே புறப்பட்டேன். தலைவிரி கோலத்தோடு கீழே விழுந்தாள் அந்தத் தையல். தெரு வாசற்படியில் வந்து கொண்டிருந்த அவள்கணவன் "முடியவே முடியாது" என்ற வார்த்தைகளை மட்டும் கேட்டுக் கொண்டுவிட்டான் போலும். அவன் ஆள் பஞ்சை. என் கம்பீர உடலைக் கண்டு என்னிடம் ஒன்றும் பேசவில்லை. அவள் 'கற்புக்கரசி'. அவளைப் பற்றியும் ஒன்றும் கூறவில்லை. அவனாக மனதில் ஏதோ கற்பனை செய்து, நான் அவளைக் கெடுக்க முயன்றதாகவும், அந்தச் சமயத்தில் தான் நேரே வந்து விடவே அவளைத் தள்ளிவிட்டு ஓடிவிட்டதாகவும் ஊரில் கூறிவிட்டான். மனைவியைப் பற்றி கணவனே கூறினால் நம்பவாமாட்டார்கள். நான் காமுகனாகப் பறை சாற்றப்பட்டேன்.

வீட்டிற்கு வந்த நான் என் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தேன். ஈயம் உருக்க வேண்டியிருந்தது. உலையில் வைத்து உருக்க, அது நன்றாக உருகி இருக்கும்போது, என் மனைவி, தண்ணீர் கொண்டு வந்தவள் தவற விட்டுவிட்டாள். அந்தஈயக்குழம்பு சிதறி வெடித்து என் கண்களைப் பொட்டையாக்கிவிட்டது. கத்தினேன், புரண்டேன், தலையில் அடித்துக் கொண்டேன். போன கண்கள் திரும்பி வரப் போகிறதா? காமுகனாகக் கருதப் பட்டதும், கண்ணிழந்ததும் ஒரே நாளிலாகையால், காளியால் கண் பிடுங்கப்பட்டேன் என்ற வதந்தி உலவ வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. மக்கள் மனவளம் இல்லாத காரணத்தாலேயே, அவர்கள் எதையும் ஆராயாமலே நம்பிவிடுகிறார்கள். இந்த நிகழ்ச்சி நடந்து ஓர் திங்கள் முடியப் போகிறது. இந்த ஊரில் என்னைக் கண்டு என்ன நடந்தது என்று கேட்க ஆளில்லை. ஆனால் ஆளுக்கொரு விதமாய்ப் பேசுகிறார்கள். பாபம் சமூகப் பழக்க வழக்கங்களாலும், அறியாமையாலும் நேரிட்ட தீங்கினால் புஷ்பம் சேற்றுக் கோயிலில் விஷம் உண்டு மடிந்தாள். ஊரில் "அம்மன் சந்நிதியில்போய் அம்மன் பாதத்தைக் கட்டிப் பிடித்து அழுதாள். உடனே ஏதோ ஜோதி கிளம்பிற்று. உயிர் போய்விட்டது. அம்மன் அவளை ஏற்றுக் கொண்டாள் என்ற பேச்சு! நான் கண்ணில்லாக் கபோதியானேன், உருகிய ஈயக் குழம்பு தாக்கப் பட்டு! அவள் காலத்திற்கிரையானால் விஷத்தையுண்டு! நான் காளியால் கண் பிடுங்கப்பட்டதாக வதந்தி! அவள் அம்மனுடன் ஐக்கியப்பட்டுவிட்டதாகப் பேச்சு! என்றுதான் உணருவார்களோ இந்த ஊர்மக்கள் இந்தக் கண்ணில்லாக் கபோதி கதையின் உண்மையை! என்றுதான் அறியுமோ அந்தக் "கற்புக்கரசி" கருத்தின் உண்மையை!

(3ம் பக்கத்தொடர்ச்சி)

பொறுத்தானொ டூர்ந்தானிடை" (குறள் 37) சிவிகை பொறுத்தானொடு ஊர்ந்தானிடை— பல்லக்கை சுமந்து செல்வானோடு பல்லக்கின் மேல் ஏறிச் செல்வான் இடம், அறத்தாறு — ஒழுக்கத்தின் நெறி, இது என வேண்டா- இத்தன்மையது என ஆராய வேண்டாம். ஒருவன் சுமந்து செல்ல, மேல் ஏறி இருந்து செல்வது முறையல்ல என்பதாம். அறம்— ஒழுக்கம், நன்னடக்கை, முறை. இது, 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்தைச் சேர்ந்த குறள். அறன் வலியுறுத்தல்— அறத்துப் பாலில் சொல்லும் அறங்களைக் கட்டாயம் செய்ய வேண்டும் என வற்புறுத்திக் கூறுதல். இதற்கு, பரிமேலழகர் உரையை மனப் பாடம் பண்ணி வைத்துக் கொண்டு, தர்மத்தின் பயன் இது என்று சொல்ல வேண்டியதில்லை. பல்லக்கைச் சுமந்து செல்வானோடு ஊர்ந்து செல்வானிடத்து நேரில் காணப்படும். முற்பிறப்பில் பிறருக்குத் தர்மம் செய்தவன் அப் புண்ணியத்தின் பயனால் பல்லக்கில் செல்கிறான். கொடாதவன் சுமந்து செல்கிறான் என ஆசிரியர் கருத்துக்கும், தமிழ் மரபுக்கும் மாறாகப் பொருள் கூறுவர். இ[illegible] தமிழ்ப் பேரறிஞர்களையும் [illegible]

ரோஜா முத்தையா

பாடில்லை. வடமொழி மயக்கால் குறளின் உண்மைக் கருத்தறிய முடிவதில்லை. தப்பித் தவறி ஒருவர் இருவர் உண்மையுரை கண்டு கூறினால் அது விதண்டா வாதமென இகழப் படுவதால் அவர் தம் முயற்சியைக் கை விட்டு விடுகின்றனர்.

சில ஆண்டுகளாகத்தான் தமிழ்ப் பேச்சாளர்கள் நாலைந்து குறட் பாக்களைப் பாடம் பண்ணி வைத்துக் கொண்டு பேச்சின் இடையிடையே ஒப்பித்து வருகின்றனர். அவர்களும் கீதை, இராமாயண மேற்கோள்களுக்குக் கூறும் விரிவுரை குறட்பாக்களுக்குக் கூறுவதில்லை. தமிழ் இலக்கியத்திலும் தமக்குப் பயிற்சியுண்டு என்று காட்டிக் கொள்ளவே குறளை எடுத்துக் கூறிவருகின்றனர். குறளுக்கு விரிவுரை கூறி விளக்கும் அளவுக்கு அவர்கள் கருத்தூன்றிக் குறளைப் படிப்பதில்லை. என்னமோ கேட்பாரற்றுக் கிடந்த குறள் இவ்வளவுக்காகிலும் செல்வாக்குப் பெற்றதே அதற்காக நாம் மகிழ வேண்டியதுதான்.

தமிழரின் தேடுதற்குக் கிடையாத செல்வமான திருக்குறள் ஏன் இப்படி மூத்ததாரத்தின் பிள்ளைபோல் புறக்கணிக்கப் பட்டு வந்தது? என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. திரு அவிநாசிலிங்கம் அவர்கள் கல்வியமைச்சரானதும் ஒவ்வொரு வகுப்பு மாணவரும் இத்தனை இத்தனை குறள் கட்டாயம் படிக்க வேண்டுமென்று கட்டளையிட்டு, அந்தந்த வகுப்புக்குரிய குறள்களையும் பொறுக்கியெடுத்து உதவினார். ஆனால், அவர் எந்த நோக்குடன் குறளைப் பாடமாக வைத்தாரோ அந்த நோக்கை இதுநாள்வரை எந்த ஆசிரியரும் நிறைவேற்றவில்லை. இஃதொன்றே திருக்குறள் இதுநாள்வரை தமிழர்க்குப் பயன்படாமல் இருந்ததற்குப் போதிய சான்றாகும். அரசியல் கட்டளைக்கே அசையாத இவர்கள், தாமே தமக்குத் தலைவர்களாயிருந்தபோது என்ன செய்திருப்பார்களென்பதை எண்ணிப் பாருங்கள்.

தமிழரின் நல்ல காலமோ, அல்லது சூழ்ச்சியின் வீழ்ச்சிக் காலமோ 15—1—49ல் இருந்து திருக்குறள் தமிழ் மக்களின் தனிச் சொத்தாகிவிட்டது. 15,16-1-49ல் சென்னையில் நடந்த 'வள்ளுவர்-குறள் மாநாட்டில்', வள்ளுவர் கருத்துப்படி திருக்குறளுக்கு உரை காண குறளுரைச் செயற்குழுவொன்றை ஏற்படுத்தியுள்ளனர். அச்செயற் குழுவினர் அறிஞர்கள் கருத்துக்களையேற்று ஆராய்ந்து நல்லுரை கண்டு, பின் அறிஞர்களைக் கூட்டி முடிவு செய்து, தாம் கண்ட உரையை வெளியிடுவர். ஆகையால், குறளை அக்குழுவினர் பொறுப்பில்விட்டு, தமிழர்கள் தம் பழமை நோக்காடி இரண்டில் ஒன்றான தொல்காப்பியத்திற்கு விளக்கம் கூறித் தமிழ் மக்களுக்குத் தம் நிலையுணரும் தகுதியை உண்டாக்குவாம்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

டும். இதே ரீதியில் இரண்டு ஆண்டிற்கு ஒருமுறை இரண்டு அணா வீதம் குறைந்துகொண்டேபோய், முடிவில் அந்தப் பணம் செல்லுபடியற்றதாகச் செய்துவிட வேண்டும். பணத்தின் மதிப்புக் குறைவதற்கு முன்பு அதை அரசாங்கத்திடம் கொடுத்துவிட்டு, அதே மதிப்புடைய வேறுபுதிய நாணயத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியேற்படுத்தவும் வேண்டும். இப்படி மாற்றிக் கொடுக்கப்படும் நாணயத்திற்கு ஒரு அளவு ஏற்படுத்திவிட்டால், கண்டிப்பாகப் பணத்தேக்கத்தைத் தடுத்துவிட முடியும் என்று உறுதி கூறுவேன். பணமூட்டைகளுக்குப் பாதம் தாங்கும் இந்த அரசாங்கம், பணத்தேக்கத்தைத் தடுப்பதற்கு இது போன்ற வழிகளைக் கைக்கொள்ளுமென்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

புதிய வரிகள்!

புதிய வரிகள் அத்தனையும் ஏழை எளியோர்களையே பாதிப்பனவாக உள்ளன. தபால் கார்டுகளையும், கவர்களையும் விலையுயர்த்தியிருப்பது நடுத்தர வகுப்பினர்களுக்கு மிகவும் தீங்காகவே இருக்கிறது. பாக்கின் வரியை, பவுண்டுக்கு ஐந்து அணாவாக உள்ளதை ஏழரை அணாவாக உயர்த்தியிருப்பதும், நடுத்தர மோட்டாத் துணி மீது கஜத்துக்கு அரையணா 'எதிர்வரி' விதித்திருப்பதும் ஏழைகளைத்தான் பாதிக்கும். குடிசைத் தொழில்களை வளர்க்க வேண்டும் என்று கூப்பாடு போடும் இவர்கள் நூல், கயிறு, மண்பாண்டம், பீங்கான், செயற்கைப்பட்டு ஆகியவற்றின் மீதுள்ள 'சர்சார்ஜ்'ஜை இரட்டிக்கப் பட்டிருப்பதால், இவர்கள் குடிசைத் தொழிலை வளர்க்க வேண்டும் என்று கூப்பாடுபோடுவது வெறும் பித்தலாட்டம் என்பது விளங்குகிறது. இது போன்ற புதிய வரி விதிப்பின் மூலம் ஏழை மக்களின் இரத்தத்தை உறுஞ்சுகிறது மத்திய அரசாங்கம். அதே சமயத்தில் பணமூட்டைகள் கொழுப்பதற்கும் வழிசெய்து கொடுக்கிறது!

உலகம் சிரிக்குமே!

மத்திய சர்க்காரின் ஆட்சிப்பீடத்தை அலங்கரித்துக் கொண்டிருப்பவர்கள், தாங்கள் காந்தியாரின் அகிம்சைத் தத்துவத்தைப் பின்பற்றுபவர்கள் என்று உலகிற்கு ஒலி பரப்பிக் கொண்டிருக்கின்றனர். உலகம் உய்ய உத்தமர் காந்தியாரின் அகிம்சைத் தத்துவங்களை உலக மக்கள் பின்பற்ற வேண்டுமென்றும் உபதேசிக்கின்றனர். உலகத்தில் சமாதானத்தை நிலைநிறுத்துவதே இந்தியாவின் இலட்சியம் என்று கரடியாய் கத்தும் இவர்களுடைய அரசாங்கம், தன்னுடைய வருமானமாகிய 308 கோடி ரூபாயில் 157 கோடி ரூபாய்; அதாவது வருமானத்தில் பாதிக்கு மேற்பட்ட பகுதியை இராணுவத்திற்காக ஒதுக்கி வைத்திருப்பது கண்டு உலகமே சிரிக்கும்!

நாட்டிலே வறுமையும், பசிப்பிணியும் கோரத் தாண்டவமாடும் இந்த நாட்களில் தயாரிக்கப்பட்டிருக்கும்—ஒரு சுதந்திர நாட்டில் "ஏழை பங்காளர்" ஆட்சியில்-பட்ஜெட்டில் பாதிக்கு மேற்பட்ட தொகை இராணுவத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த யோக்கியதையில் பட்ஜெட்டில் 14.79 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. துண்டு விழுவதைச் சரிக்கட்ட ஏழை எளியவர்களின் மீது புதிய வரிகளும் புகுத்தப்பட்டிருக்கிறது. இதுபோன்ற ஒரு அழகிய பட்ஜெட்டைத் தயாரித்திருக்கும் இந்திய நிதி அமைச்சர் டாக்டர் ஜான்மத்தாயின் பொருளாதார மேதையை உலகமே போற்றும்!

இந்தியா தன் வருமானத்தில் பாதிக்கு மேற்பட்ட தொகையை இந்தச் சமாதான காலத்தில்—உலகத்தில் நிரந்தரமான சமாதானத்தை நிலைநிறுத்த அறிஞர்கள் முயற்சிக்கிற பொழுது—ராணுவத்திற்காக ஒதுக்கி வைத்திருப்பதைப் பார்க்கும் வெளிநாட்டவர்களுக்கு, இந்தியா தன்னை ஒரு யுத்தத்திற்கு ஆயத்தப்படுத்திக் கொள்கிறதோ என்ற சந்தேகம் தோன்றத்தான் செய்யும். இன்றைய ஆட்சிபீடத்திலுள்ளவர்கள் ராணுவத்தையும் அடக்குமுறைகளையும் கொண்டு, இந்தியாவில் ஹிட்லரின் ஆட்சிமுறையை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள் என்று நானும்தான் சந்தேகப்படுகிறேன். ராணுவத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 157-கோடி ரூபாயில் துண்டு விழும் 14¾-கோடி ரூபாயைக் குறைத்து, பட்ஜெட்டைத் துண்டு

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

விழாதபடி சரிக்கட்டி, ஏழைகளின் உழைப்பை உறிஞ்சாமல் விட்டிருக்கலாம். அதுவும் செய்யத் தவறிவிட்டது இந்த அரசாங்கம்.

கூட்டின் கொடுமை:

ஏழைகளின்மீது இரக்கமற்ற வடவர்களின் கூட்டு ஆட்சியில் சிக்குண்டு கிடப்பதின் தீமைகளை இனியாகிலும் மக்கள் தெரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன். தேவையற்ற வீண் ஆடம்பரமானதும் அவசியமற்றதுமான பல செலவினங்களுக்கும் நாம் ஈடுதரவேண்டியவர்களாக இருக்கிறோம். உதாரணமாகச் சென்ற ஆண்டு அகதிகளுக்காக 19¾-கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிற்கும் 10-கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நமக்குச் சம்பந்தமில்லாத இதுபோன்ற எத்தனையோ பல செலவினங்களும் நம் மீது சுமத்தப்பட்டிருக்கின்றது. அநீதியையும், அநியாயச் செலவினங்களுக்கான அதிகப்படிச் செலவினங்களையும் ஏற்றுக்கொண்டு இன்னும் எத்தனை நாளைக்கு அடிமையாக இருப்பது?

சென்னை பட்ஜெட்:

சென்னை சர்க்காரும் இந்த ஆண்டு தயாரித்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் 4-கோடி ரூபாயைச் சரிக்கட்டுவதற்குப் பல புதிய வரிகளை விதித்திருக்கின்றனர். துண்டுவிழும் தொகையைச் சரிக்கட்டுவதற்கு வேறு எத்தனையோ பல முறைகள் இருந்தும், அதைக் கைக்கொள்ளாதது ஏனோ தெரியவில்லை? உதாரணமாக சென்னை அரசாங்கம் சென்ற இரண்டாண்டுகளாக நகர பஸ் போக்குவரத்துகளில் ஒரு பகுதியை ஏற்று நடத்தியதால் சுமார் 14,33,000 நிகர வருமானம் கிடைத்திருப்பதாக கணக்கு வெளியிட்டிருக்கிறார்கள். இதுபோன்ற பல இலாபம் தரும் தொழில்களைத் தேசியமயமாக்கும் முயற்சியில் தீவிர கவனம் செலுத்தியிருந்தால் புதிய வரிகளைப்போட்டு மக்களைத் துன்பப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டிராது.

வாழ்க்கைக்கே போதிய வருமானமின்றித் தவிக்கும் மக்களிடம் புதிய வரிகளை எதிர்பார்ப்பது மிகவும் தவறு. சட்டத்தையும், துப்பாக்கியையும் காட்டி வரியை வசூலித்துவிடமுடியும். இந்தப்போக்கு ஜனநாயகத்திற்கு முற்றிலும் முரணானது என்பதை ஆளவந்திருப்பவர்கள் உணரவேண்டும். உணரத் தவறினால் ஆட்சி நீடிக்காதென்று எச்சரிக்கிறேன்.

புதிய வரிகள்.

“உழுதவன் கணக்குப்பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது” என்பது நாட்டுப்புற மக்களிடையே நிலவிவரும் ஒரு வழக்கு மொழி. ஆனால் இது மிகவும் உண்மை என்பது இன்று விளங்கிவிட்டது. விவசாயிகளுடைய குறைகளையும், அவர்களுடைய துயரங்களையும்பற்றி விளக்கவேண்டிய அவசியமில்லை. நிலைமை இவ்வளவு மோசமாக இருக்கும்பொழுது, விவசாயிகள் தங்களின் விளைபொருள்களை விற்கும்பொழுது வரி செலுத்தவேண்டும் என்பது மிகவும் கண்டனத்திற்குரியது. அதுவும் குறுகிய நிலப்பரப்பையுடைய சிறிய விவசாயிகளாலேயே பயிரிடப்பட்டு வரும் கரும்பு, மிளகாய், பருத்தி, மஞ்சள், வாழைப்பழம் போன்ற பொருள்களின் மீது வரிவிதித்திருப்பது மிகவும் கொடுமை என்றுதான் கூறவேண்டியிருக்கிறது.

இரண்டாவதாக முனிசிபாலிட்டி, பஞ்சாயத்துகள் ஆகியவற்றிற்கு செலுத்தப்பட்டுவரும் வீட்டுவரிகளில் 12½ சதவிகிதம் “சர்ஜார்ஜ்” ஆக வரி விதித்திருப்பது என்பது மிகவும் மோசமானது. இப்பொழுது முனிசிபாலிட்டிகளிலும், பஞ்சாயத்துகளிலும் வசூலிக்கப்படும் வரியோ மிகவும் அதிகம். அவைகள் மக்களுக்குச் செய்துவரும் வசதிகளோ மிக மிகக் குறைவு. நல்ல சுகாதாரம், குடி தண்ணீர் வசதி, விளக்குவசதியுடைய பஞ்சாயத்துகளே ஏன்(?) முனிசிபாலிட்டிகளும்கூட மிகக்குறைவு. இப்படியிருக்கையில் “சர்ஜார்ஜ்” வசூலிப்பது கொஞ்சம்கூட தகாதது. ஆனால் இதற்குப் பதிலாக மாதம் குறைந்தது முப்பது ரூபாய்க்குமேல் வரிசெலுத்துவோரிடமிருந்தும், வீடுகள் கட்டி வாடகைக்கு விட்டிருப்போரிடமும் அந்த வருமானத்திலிருந்து 25 சதவிகிதம் “சர்ஜாஜ்” வசூலிக்கலாம், இப்படிச் செய்தால் ஏழைகள் இந்த வரிக் கொடுமையிலிருந்து காப்பாற்றப் படுவார்கள் என்றும் நம்பலாம்.

அடுத்தபடியாக காப்பிஓட்டல்கள், சினிமாக்கள், சாப்பாடு ஓட்டல்கள் ஆகியவற்றிற்கு வரி விதிக்கவிருக்கும் யோசனையை நாம் வரவேற்கிறோம். இந்தப் புது வரிகள் ஸ்தாபனத்தின் சொந்தக்காரர்களையே கட்டுப்படுத்துவனவாக இருக்கும் முறையில் ஏற்

குடி அரசு
சிறு கதைப் போட்டி.

1. விதவையின் குமுறல்!	
2. ராதையும்—சீதையும்.	
3. தேவி பிரசாதம்!	
4. கற்சிலை!	
5. சாதித்திமிர்!	
6. பயித்தியக்காரன்!	
7. காதலா.........?	
8. மாஜிக் கைதி!	
9. வாழ்க்கைப் பாதை!	
10. மண நினைவு!	
11. கூத்தியாள் குப்பாயி!	
12. கருகிய மலர்!	
13. கண்ணில்லாக் கபோதி.	

× அடையாளமிட்ட சிறு கதையைப் பரிசுக்குரியதென நான் தேர்ந்தெடுக்கின்றேன்.

பெயர்..........................

தெரு.........

..........1949. ஊர்.......

படுத்தப்படவேண்டும் என்று தான் ஆசைப்படுகிறோம். வரி விதிக்கப் பட்டிருப்பதற்காக சாப்பாட்டின் கட்டணத்தை உயர்த்துவது, அல்லது அளவையும் தரத்தையும் குறைப்பது, சிற்றுண்டிவகைகளின் விலைகளைக் கூட்டுவது போன்ற முறைகளை ஓட்டல் சொந்தக்காரர்கள் கையாளாதபடி அரசாங்கம் தடுக்கவேண்டும். இது போலவே சினிமாவிற்கு விதிக்கப்படும் வரி, சினிமாகொட்டகையின்சொந்தக் காரர்களையும், பிலிம்கம்பெனியாரையும் கட்டுப்படுத்துவதாக இருக்கவேண்டும். இந்த முறைகளை அரசாங்கம் பின்பற்றாவிட்டால் இந்த வரிவிதிப்புகளும் ஏழைகளைத்தான் பாதிக்கும். இந்த முறைகளை அரசாங்கம் பின்பற்றவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளவில்லை. ஆனால், பின்பற்றுமா என்று உங்களைத்தான் கேட்கிறேன்.

பொதுவாக இரு சர்க்காரும் தயாரித்துள்ள வரவு செலவுத் திட்டம் பொது மக்களுக்கு மகிழ்வூட்டுவதாக இல்லை. இன்றைக்கு நாம் முதலாளித்துவ ஆட்சியில் சிக்குண்டு தவிப்பது மட்டுமல்ல, இரட்டை ஆட்சியின் கொடுமையிலும் மாட்டிக்கொண்டிருக்கிறோம். மத்திய சர்க்காரும், மாகாண சர்க்காரும் ஏழைகளின் இரத்தத்தை உறுஞ்சுவதில் போட்டிப் போட்டுக்கொண்டிருக்கிறது. ஆளத் தெரியாதவர்களின் கையில் ஆட்சி அகப்பட்டு விட்ட காரணத்தால் மக்கள் அல்லல் படுகின்றனர்.

இன்றைய சர்க்காரின் திட்டங்களிலோ, போக்கிலோ வருங்காலம் இன்பம் தருவதாக அமையும் என்ற நம்பிக்கைக்கு வழியே கிடைக்கவில்லை. மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியேற்பட்டு, இன்பம் தழைக்கவேண்டுமானால் திராவிடநாடு வடநாட்டுத் தொடர்பிலிருந்து பிரியவேண்டும். ஆட்சி முறை மாற்றி அமைக்கப்படவேண்டும். இதற்காக உயிரையும் பணயம் வைத்துப் போராட ஒவ்வொருவரும் உறுதிகொள்ளவேண்டும்.

"புத்ததாசன்"

வேண்டுகோள்!

[★]

தோழியர்களே! தோழர்களே!

இந்த இதழில் வெளிவந்திருக்கும் சிறுகதையோடு, 3-ம் பருவத்திற்குரிய 13 கதைகளும் வெளிவந்து விட்டன.

வெளிவந்திருக்கும் 13 கதைகளின் தலைப்புப் பெயர்களையும் அவற்றிற்குரிய எண்களையும் கொண்டு, இதன் மறுபுறத்தில் வாக்குரிமைச் சீட்டாக அமைக்கப்பெற்றிருக்கிறது.

வாக்குரிமை வழங்கும் முழுப்பொறுப்பும், வாசகர்களுக்கே தரப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்!

13 கதையையும் படித்துப் பார்த்த நீங்கள், எந்தக் கதையைச் சிறந்ததென்று முடிவு கட்டுகிறீர்களோ, அந்த எண்ணுக்கு முன்னால் × அடையாளம் போட்டு, கீழே கையெழுத்தோடு முகவரியும் குறிப்பிட்டு, கத்திரித்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

ஒவ்வொரு ஊரிலுள்ளவர்கள் ஒன்றாகக் கூடியோ அல்லது அந்தந்த ஊர் குடி அரசு ஏஜண்டிடம் கொடுத்தோ, மொத்தமாகச் சேர்த்தும் வாக்குச் சீட்டுகளை அனுப்பலாம்.

தனித்தனியாக அனுப்புவோர் புக்போஸ்டிலேயே அனுப்பலாம்.

ஆனால், உங்களுடைய வாக்குரிமையை இதன் பின்புறத்திலமைக்கப்பட்டிருக்கும், வாக்குரிமைச் சீட்டில்தான் பதிவு செய்ய வேண்டுமென்பதை மறந்து விடாதீர்கள்.

வாக்குரிமைச் சீட்டு, வந்து சேரவேண்டிய கடைசி நாள் 23—3—49.

நடு நிலைமையில் நின்று நீங்கள் நல்ல தீர்ப்பு வழங்குவீர்கள் என்னும் நம்பிக்கையோடு, உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் இந்தப் பொறுப்பை யுணர்ந்து, உயரிய முறையில் ஒத்துழைத்து, நம் முயற்சியை வெற்றிபெறச் செய்யவேண்டுமென்பதே நமது பணிவான வேண்டுகோள்.

ஆசிரியர், "குடி அரசு", ஈரோடு.

குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

★

தத்துவவிளக்கம்	0	12	0
இந்தியாவின் குறை பாடுகள்	0	8	0
பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்)	0	8	0
நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா?	0	6	0
கர்ப்ப ஆட்சி	0	6	0
பெரியார்பெருந்தொண்டு	0	6	0
வெளியேறு	0	6	0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?	0	5	0
பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம்	0	4	0
வால்டையரின் வாழ்க் கைச் சரிதை	0	4	0
கார்ல் மார்க்ஸ்	0	4	0
சமதர்ம உபன்யாசம்	0	4	0
அப்பரும் திருஞான சம்பந்தரும்	0	3	0
சோஷியலிசம்	0	3	0
இலங்கை உபன்யாசம்	0	3	0
இராமாயணப் பாத் திரங்கள்	0	3	0
மேல்நாடும், கீழ்நாடும்	0	3	0
உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை?	0	3	0
இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து!	0	2	0
இதிகாசங்கள் புகட்டும் நீதி	0	2	0
உண்மைத் தொழிலாளி யார்?	0	2	0
திருச்சிப் பிரசங்கம்	0	2	0
ராமலிங்க சுவாமி பாடல்	0	2	0
திராவிடர்-ஆரியர் உண்மை	0	2	0
தமிழ் இசை-நடிப்புக் கலைகள்	0	1	0

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,

கச்சேரி வீதி, ஈரோடு.

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம். 59. கச்சேரி வீதி' ஈரோடு.